# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 2

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

October 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## காவிரி பிரச்சினை

# மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பது யாருடைய நலனுக்காக?

ஆறுகள் பாயும் நாடுகளில்கூட, மழைப்பொழிவு குறையும்போது தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது, நதிநீரைப் பங்கிடுவது சம்பந்தப்பட்ட மாநில மக்களிடையே பதற்றத்தையும் உணர்ச்சிவசத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த நதிநீர்ப் பிரச்சினை தேசிய எல்லைகளைக் கடந்து ஓடும் நதி விவகாரங்களிலும் எழுகிறது. சமீபத்தில் கூட சிந்து நதி விவகாரத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயும் அல்லது பிரம்மபுத்திரா (ட்ஷாங் பொ) நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக இந்தியா மற்றும் சீனா இடையேயும் பிரச்சினை எழுந்தது. உயிர்வாழ்வதற்கு, அது குடிநீர் அல்லது விவசாயமானாலும், நீர் மிகவும் அத்தியாவசியமானதென்பதால், இப்பிரச்சினைகள் சரியாகத் தீர்க்கப்படாவிட்டால் அது கொடிய விளைவுகளை ஏற்படுத்திவிடும். உணர்ச்சிகள் எளிதாக விரைவாகத் தூண்டப்படலாம், மக்களுக்கிடையே பகையுணர்வு தூண்டப்பட்டு வன்முறையும் நடக்கலாம்.

சமீபத்தில், கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டை உலுக்கிய காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக எழுந்த சர்ச்சையால் இந்த எரியும் பிரச்சினை மீண்டும் முன்னுக்கு வந்துள்ளது. தினமும் விநாடிக்கு 12,000 கன அடி தண்ணீரை தமிழ்நாட்டுக்குத் திறக்க வேண்டும் என கர்நாடகாவிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து சுயநலமிகள் உடனடியாக செயல்பாட்டில் இறங்கி பிரச்சினையை மேலும் ஊதிப்பெரிதாக்கினர், குறுகல்வாத உணர்வைக் கிளப்பினர், ஒருமாநில மக்களுக்கு எதிராக மற்றொரு மாநில மக்களை வெளிப்படையாகத் தூண்டிவிட்டனர். வன்முறைக்கு இரண்டு மதிப்பிற்குரிய உயிர்கள் பலியாயின, ஏராளமான சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. இனவெறிக்கும்பல் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட, இத்தகைய வன்முறைகளால் ஐடி நகரமான பெங்களூரு ஒரு நாள் முழுவதும் ஸ்தம்பித்துப்போனது. அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை, பெரும்பாலும் காவல்துறை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. இறுதியாக பாதுகாப்புப்படையினர் இறங்கினர், இரவில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, சில பகுதிகளில் அடுத்த நாளும் அத்தடை உத்தரவு நீடித்தது. அதற்கு எதிராக தமிழ்நாட்டில் ஒரு சில சம்பவங்கள் நடந்தன. கர்நாடகாவில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள், குறிப்பாக லாரிகள் மற்றும் பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன. இரண்டு மாநிலங்களின் முதலாளித்துவ அரசாங்கங்களும், வாதங்கள் மற்றும் எதிர்வாதங்களையும், தங்களுக்கு சாதகமான செய்திகளையும் பரப்பிவிட்டனர், அதன்மூலம் அவரவர் மக்களைத் தூண்டிவிட்டு 'மக்களுக்கு எதிராக மக்கள்' மோதலுக்கு இட்டுச் சென்றனர்.

எனவே இந்தப் பிரச்சினையை உணர்ச்சிப் பூர்வமாக பார்க்காமல் மிக நுட்பமாக ஆய்வுசெய்வது மிகவும் முக்கியமாகும். சுதந்திரம் பெற்று 69 ஆண்டுகள் கடந்தபின்னரும் கூட நீர்பங்கீடு விஷயத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சரியான தீர்வு எட்டப்படவில்லை என்பதோடு மட்டுமல்லாமல் அதற்காக நீதிமன்றத்தின் கதவைத் தட்டவேண்டிய நிலையே உள்ளது. சுருக்கமாக சில அத்தியவசியமான கருத்துக்களைப் பார்ப்போம். நமது நாட்டில் செழிப்பான நீர் ஆதாரங்கள் வளமாக இருந்த போதிலும் அடுத்தடுத்து வந்த மத்திய அரசாங்கங்கள் அவற்றைப் புறந்தள்ளிவிட்டதோடு முழுமையான, சரியான, விஞ்ஞானபூர்வ தேசிய நீர் மேலாண்மைக் கொள்கையை வகுக்கத் தவறிவிட்டன. இது, முறையாகத் திட்டமிடாத அணைகள், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் காடுகள்அழிப்பு, அணைகளில் வண்டல் மண் திட்டுகள், வறட்சிகாலங்களில் நீர்த்தேக்கங்கள் வறண்டுபோய் மழைக்காலங்களில் நீர்திறக்கப்பட்டு வெள்ளத்தை உருவாக்குதல், நிலத்தடி நீரை அதீதமாக உறிஞ்சுதல், போன்ற ஏராளமான பிரச்சினைகளை உருவாக்கிவிட்டது, இது நதி நீரைப் பங்கிடுவதில் பல்வேறு மாநிலங்களுக்கிடையே பல தாவாக்களை உருவாக்கிவிட்டது. காவிரி நதிநீர்ப் பிரச்சினை ஒன்றும் தனியானது அல்ல. மேலும் பல பிரச்சினைகள் அவ்வப்போது எழுகின்றன, அவையும் தீர்க்கப்படாமல் உள்ளன. ஒருசிலவற்றைக் குறிப்பிடவேண்டுமென்றால், பஞ்சாப் மற்றும் ஹரியானா இடையிலான ராவி மற்றும் பியாஸ் நீர்ப்பங்கீடு பிரச்சினை, மஹாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், சத்தீஸ்கர், மற்றும் ஒடிசா இடையேயான கோதாவரி நீர்ப்பங்கீடு பிரச்சினை, மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா இடையேயான கிருஷ்ணா நதி நீர்ப்பங்கீடு பிரச்சினை ஆகியவற்றைக் கூறலாம். இவை எல்லாம், குடிநீர் மற்றும் விவசாயத்திற்காக மக்களின் தேவையைக் கருத்தில்கொண்டு பார்த்தால் முழுமையான, விஞ்ஞானபூர்வ ஒருங்கிணைந்த தேசிய நீர் மேலாண்மைக் கொள்கை எவ்வளவு அவசியம் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அந்த கொள்கை வெறுமனே நீர் திறப்பது மற்றும் நீர் போக்கிற்கான சில நடவடிக்கைகளை மட்டுமே கொண்டிருக்கக் கூடாது. அந்தக் கொள்கை முழுமையானதாக இருக்க வேண்டுமானால் அதில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் காடுவளர்ப்பு, சரியான நிலப் பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் வளப்படுத்துவது, இன்னும் வேறு சில நீர்சேமிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை சேர்க்கவேண்டும். இன்றுவரை அத்தகைய கொள்கையை எந்த மத்திய அரசாங்கமும், காங்கிரஸோ அல்லது பாஜகவோ, அமல்படுத்தவில்லை.

காவிரி பிரச்சினையைப் பொறுத்தமட்டில் காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கான நடுவர் மன்றத் தீர்ப்பாயம் அதன் இறுதித் தீர்ப்பை 2007இல் வெளியிட்டது, அதில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் காவிரி நீரை எப்படிப் பங்கீட்டுக் கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டது. இதில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களிடையேதான் பிரதான பிரச்சினை, ஏனெனில் இவைதான் காவிரிப்படுகையின் அதிகப்படியான பரப்பைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த தீர்ப்பு அனைவரையும் திருப்திபடுத்தாததால் மாநிலங்களிடையே நீர்ப்பங்கீட்டு மோதலை தீர்க்கவில்லை. இந்த ஆண்டு கர்நாடகா மற்றும் தமிழ்நாடு இரண்டு மாநிலங்களிலுமே வழக்கத்தை விட குறைவான மழையே பெய்துள்ளது, அது பிரச்சினையை மேலும் அதிகப்படுத்திவிட்டது. நீரைப் பங்கீடுவதில் சிக்கல் எழுந்தால் அதைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, எழக்கூடிய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக பிரச்சினையை விஞ்ஞானபூர்வமாகவும் மக்களுக்கு ஆதரவான அணுகுமுறையையும் பின்பற்றி அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே வேளையில் இப்பிரச்சினையை நீண்டகால அடிப்படையில் தீர்ப்பதற்காக நீரை சேமித்தல், நீர் மேலாண்மை, மற்றும் நிலங்களை சரியாக


தொடர்ச்சி 2ம் பக்கம்




## காவிரி பிரச்சினை

# பிரச்சினைகளை தீர்க்காமல் வைத்திருப்பது மக்களுக்கு எதிராக மக்களை திருப்பவே

*1ம் பக்கத் தொடர்ச்சி*

முறையாகப் பயன்படுத்துவதற்கான உரிய முறைகளை நன்கு திட்டமிட்டு முறையாக அமல்படுத்தினால் தீர்வு காணமுடியும். நம்மைப்போன்ற கூட்டாட்சி அமைப்பில், பிரச்சினையை தீர்ப்பதற்கு முறையான உடன்பாட்டிற்கு வருவதற்கு தேவைப்பட்டால் மத்திய அரசாங்கம் தலையிடுவதும் அவசியமானதாகும்.

இரண்டு தரப்பிலும் மோதல்கள் என்னதான் தீர்க்கப்படமுடியாததுபோல் கூறப்பட்டாலும், இருதரப்பிலுமுள்ள **95%** மக்களின் நலன்களும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்கள் என்ன சமூகத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், சாதி, இனம் மற்றும் மொழிகளுக்கு அப்பாற்பட்டு அனைவரது நலன்களும், ஒன்றுதான். இருதரப்பு ஆளும் கட்சிகளும், சாதுர்யமான பூர்ஷ்வா பிரச்சாரங்களும் கூறுவதுபோல் இவர்களது நலன்களும் தேவைகளும் ஒன்றுக்கொன்று எதிரானதல்ல பகையானவையும் அல்ல. அவர்கள் அனைவருக்கும் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒருவருக்கு தண்ணீர் கிடைத்தால் மற்றவருக்கு தண்ணீர் கிடைப்பது சாத்தியமல்ல என்று கூறப்படுகிறது, அதுவும் உண்மையல்ல. பிரச்சினை என்னவென்றால் மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்வதற்குரிய வழிமுறைகளைக் கண்டறியவேண்டும், மக்களின் நீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு வேறு நீராதாரங்களை சரியாகப் பயன்படுத்துவதற்கு விஞ்ஞானபூர்வமுறையிலும், மக்கள் ஆதரவு அணுகுமுறையோடும். நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எனவே சீராக்க நடவடிக்கைகள் மற்றும் உண்மையான நீர் இருப்பை முறையாக கண்காணிப்பதோடு மக்களிடையே விஞ்ஞானபூர்வ விழிப்புணர்வு போதிக்கப்பட்டு ஒற்றுமை உணர்வும் உயர்ந்த கலாச்சாரமும் ஊட்டப்பட்டால் இப்பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கமுடியும். ஆனால் பிரச்சினைக்குரிய இந்த இரண்டு மாநில அரசாங்கங்களும் இதைச் செய்யவில்லை, வெவ்வேறு பகுதிகளில் உண்மையான நீர்ப்போக்கைக் கண்காணிப்பதற்கும், நதிநீரைப் பங்கீடுவதற்கான தொழில்நுட்பத்தை உறுதி செய்வதற்கும் காவிரி மேலாண்மை வாரியத்தையும் காவிரி ஒழுங்காற்று ஆணையத்தையும் இத்தனை ஆண்டுகளாக மத்திய அரசாங்கமும் அமைக்கவில்லை.

ஆனால் கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டை ஆளும் முறையே காங்கிரஸ் மற்றும் அதிமுக அரசாங்கங்கள் மோதலில் ஈடுபட்டுள்ளன, தங்களது கோரிக்கைகளிலிருந்து ஒரு அங்குலம் கூட விட்டுக்கொடுக்கவில்லை, கோரிக்கைகள் எதிர்–கோரிக்கைகள் பறக்கின்றன, அவரவருக்கு சாதகமான உண்மைகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. ஒரு அரசாங்கம் மற்ற மாநில மக்களின் தேவையைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் திடீரென நீரை திறந்துவிட மறுக்கிறது. அதே நேரத்தில் மற்றொரு அரசாங்கம் அடுத்த மாநில மக்களின் தேவைகளைக் கருத்தில்கொள்ளாமல் கோரிக்கைகளை முன்வைக்கிறது. இந்த மோதலில் இருவருமே மக்களின் ஒற்றுமைக்கு, சரிசெய்யமுடியாத அளவிற்கு, பங்கம் விளைவிக்கின்றனர், கர்நாடகத்தில் சட்டமன்ற தேர்தல் வரவிருக்கும் நிலையில் தேர்தல் ஆதாயம் பெறுவதற்காக மக்களின் நலனைக் காப்பதில் தாங்கள்தான் சாம்பியன்கள் என்று காட்டிக் கொள்ளும் அதேவேளையில் மக்களை உணர்ச்சி வசப்படவைத்து, எதிர்ப்புணர்வையும் வெறுப்புணர்வையும் பற்றவைத்து ஒரு மாநில மக்களுக்கு எதிராக மற்றொரு மாநில மக்களை தூண்டிவருகின்றனர். ஆளுங்கட்சிகள் மட்டுமல்லாது, அனைத்து முதலாளித்துவ கட்சிகள், குட்டி முதலாளித்துவ கட்சிகள் மற்றும் சமூக ஜனநாயகக் கட்சிகள் என அனைத்து நிற கட்சிகளும் அரசியல் ஆதாயம் பெறுவதற்காக களத்தில் குதித்துள்ளனர்.

பிராந்திய ஊடகங்கள் மட்டுமல்லாது தேசிய ஊடகங்களும் இந்த சதியில் தங்களுடைய பங்கிற்கு இந்த அல்லது அந்த மாநிலம் தண்ணீருக்கு வஞ்சிக்கப்படுகிறது என்று காட்டுவதற்காக அல்லது இத்தகைய உணர்ச்சிப்பூர்வமான பிரச்சினையில் இனவெறியையும் ஒருமக்களுக்கு எதிராக மற்ற மக்களை எப்படித் தூண்டிவருகின்றன என்று காட்டுவதற்காக, அதற்கு சாதகமான செய்திகளை வெளியிட்டன. ஆனால் இவையெல்லாம் எப்படி மக்களின் பொது நலனுக்கானவையாக இருக்க முடியும்?

*1991*இல் காவிரி பிரச்சினையால் வன்முறைகள் வெடித்தபோது, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் கேரளா, கர்நாடகா, மற்றும் தமிழ்நாடு மாநில கமிட்டிகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டதாவது : காவிரி நீரைப் பாரம்பரியமாக நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளின் நலன்களை எவ்வாறு குறைத்து மதிப்பிடமுடியாதோ அது போலவே போதிய பாசன வசதியை தங்களின் அரசாங்கங்கள் செய்துகொடுக்காததால் காவிரி நீரை உபயோகிக்க இயலாத ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளின் நலன்களையும் புறக்கணித்துவிடமுடியாது என்று நாங்கள் கருதுகிறோம். இந்த இருதரப்பு மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு, விஞ்ஞானபூர்வ பக்கச்சார்பற்ற (ஒருதலைப்பட்சமில்லாத) கண்டறிதல்களை வைத்துகொண்டு ஒரு நடுநிலையான நிபுணர்குழுவைக் கொண்டு காவிரி நீர் இருப்பு தொடர்பான தரவுகளின் அடிப்படையில் இனிமேலும் எவ்வித தாமதமுமின்றி சுமூகமான தீர்வை உடனடியாக எட்டவேண்டும். அந்த உண்மைகளிலிருந்து காவிரி நீரின்மூலமாக இரண்டு மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியாது என்று தெரிய வந்தால், நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது உள்ளிட்ட மாற்று நீராதாரங்களை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும்.' இந்தக் கருத்தை 2007லிலும் நாங்கள் மீண்டும் வலியுறுத்தினோம் (புரொலிடேரியன் எரா, 1–05–2007)

மாநிலங்களுக்கிடையிலான நதிநீர்ப் பிரச்சினையை இன்றைய முதலாளித்துவ அமைப்பிலிருந்து பிரித்துப் பார்த்தால் அப்பிரச்சினையை உண்மையாக புரிந்துகொள்ளவோ சரியாக பகுப்பாய்வு செய்யவோ முடியாது. முதலாளித்துவம், அதன் சொந்த சுரண்டல் குணாம்சத்தால் தொடர் நெருக்கடி அபாயத்தில் சிக்கித்தவிக்கிறது. மக்களின் அவலநிலை மற்றும் அதிருப்தியிலிருந்து அவர்களின் கவனத்தை எப்படியாவது திசைதிருப்ப வேண்டும் என்ற நோக்கத்திலுள்ள முதலாளித்துவம் உழைக்கும் மக்களிடையே வெறுப்புணர்வையும், பிளவுவாதத்தையும், துவேச பிரச்சாரத்தையும் ஏற்படுத்திவருகிறது. பல்வேறு தரப்புகளையும் மாநிலங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களும் வலுவான ஜனநாயக இயக்கத்தில் ஒன்றுபட்டு விழிப்புணர்வடைந்து விட்டால் பின்னர் சந்தேகமின்றி இந்த தேக்கமடைந்துவிட்ட காலாவதியாகிப் போன முற்றிலும் அழுகிவிட்ட முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராகத்தான் செல்வார்கள் என்பதால் உழைக்கும் மக்களின் ஒற்றுமையைக் கண்டு முதலாளித்துவ வர்க்கம் மரணபயத்தில் இருக்கிறது. எனவே பல்வேறு மாநில அரசாங்கங்கள், தங்களது முதலாளித்துவ எஜமானர்களுக்குக் கட்டுப்பட்டு, பிரச்சினைகளையும் மோதல்களையும் தீர்க்காமல் வைத்து, அவற்றைப் பயன்படுத்தி மக்களைப் பிளவுபடுத்தி முதலாளித்துவ வர்க்கத்தின் இருத்தலை பாதுகாத்துக்கொள்வதற்கும், மற்றொரு புறம் இந்த மோதல்கள் அல்லது பிரச்சினைகளை வைத்து தேர்தல் மற்றும் அரசியல் ஆதாயம் தேடவும் முயற்சிக்கின்றன.

இன்று, காவிரி பிரச்சினை போன்ற நதிநீர் பங்கீடு தொடர்பான பிரச்சினைகள் வரும் போதெல்லாம், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு அரசாங்கங்களுமே தங்கள் மாநில மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் தாங்கள் முன்னணியில் இருப்பதாகக் காட்டிக்கொள்கின்றன. ஆனால் மத்திய அல்லது மற்ற அனைத்து மாநில அரசாங்கங்களைப் போலவே, இந்த இரு அரசாங்கங்களும் உலகமயம், தனியார்மயம் மற்றும் தாராளமயம் எனும் ஏகபோக–ஆதரவு, மக்கள்–விரோதக் கொள்கைகளை அமல்படுத்தி மக்களை வறுமைக்குள் தள்ளுவதற்கு கொஞ்சமும் தயக்கம்காட்டவில்லை என்பதை நாம் புறந்தள்ளிவிடமுடியுமா? இந்தக் கொள்கைகள் எல்லாம் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களை, குறிப்பாக விவசாயிகளைப் பெருமளவில் பாதிக்கவில்லையா? உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மானியக் குறைப்பால் அவற்றின் விலை உயர்வு, விவசாய இடுபொருட்கள் விலையேற்றம், பருவநிலை மாற்றத்தால் பருவமழை பொய்த்தல் அல்லது பருவம் மாறி மழை பொழிதல் போன்றவற்றால் விவசாயிகள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். விவசாயம் பொய்த்தால் போதிய நஷ்ட ஈடு இல்லை, அதே வேளையில் தங்களது உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை இல்லாததால், சில நேரங்களில் தங்கள் பிள்ளை போல் வளர்த்து உருவாக்கிய விளை பொருட்களை எரித்து அழிக்கும் துயரநிலைக்கும் தள்ளப்படும் விவசாயிகள் வாங்கிய கடனைக்கூட கட்டமுடியாமல் கடன் சுமைக்கு ஆளாகி தற்கொலையும் செய்துகொண்டுள்ளனர். அப்போதெல்லாம் ஏகபோக முதலாளிகளுக்கு வரிச்சலுகைகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வாரி இறைக்கும் இதே அரசாங்கங்கள் விவசாயிகளைப்பற்றி கொஞ்சமும் கவலைகொள்ளவில்லை என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

அறிவு வளரவளர தொழில்நுட்பமும் முன்னேறுகையில் இதுவரை தொடாத நீராதாரங்களை எடுத்தல், நிலத்தடி நீரை வளப்படுத்துதல், மற்றும் உரிய நீர் மேலாண்மை ஆகியவற்றிற்கு பல்வேறு புதியவழிகள் கிடைத்துள்ளன, அவற்றை வைத்து இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். ஆனால் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இப்பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பவில்லை என்பதே உண்மை, மக்களைப் பிளவுபடுத்துவதற்கு இந்தத் தீர்க்கப்படாத பிரச்சினைகளைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் நினைக்கின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சில திட்டங்களை அவர்கள் கொண்டுவரும் போதுகூட, முதலாளித்துவ அமைப்பின் கூடவே பிறந்த மக்கள்–விரோத அணுகுமுறை, எங்கும் வியாபித்திருக்கும் ஊழல், தவறான திட்டமிடுதல், அதிகாரவர்க்க முறைகேடுகள், ஆளும் வர்க்கத்தின் நலன்கள், மற்றும் அரசியல் நயவஞ்சக நோக்கங்களால் அந்த நடவடிக்கைகள் பயனற்றதாகின்றன.

கடந்த டிசம்பரில் சென்னை, கடலூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது கர்நாடக மக்கள் ஏராளமான பொருளுதவிகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கி சகோதர உணர்வை காட்டியதை சமூகவலைதளங்களில் நல்லெண்ணம் கொண்ட மனிதர்கள் நினைவூட்டினர். தற்போதைய கலவரத்திலும் கூட கர்நாடகாவில் பல இடங்களில் சமூக விரோத கும்பல் தமிழ்மக்களை தாக்க முயற்சித்த போது அதை அங்குள்ள கன்னடமக்கள் தடுத்து பாதுகாப்பு அளித்துள்ளனர். அதேவேளையில் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு பயணமாக வந்திருந்தவர்களை சகோதர உணர்வோடு பாதுகாப்பாக தமிழக மக்கள் நடத்தினர். ஆக வன்முறை சம்பங்களில் ஈடுபட்டவர்கள், மக்களின் ஒற்றுமைக்கு உலைவைக்கும் வெகுசில சமூக விரோத சக்திகளே என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இது எதைக் காட்டுகிறது என்றால், பொதுவாக இரு மாநில மக்களும் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வு கொண்டிருக்கவில்லை.

இரண்டு மாநிலங்களிலும் உள்ள பிரதான பாராளுமன்றவாத அரசியல் கட்சிகள், குறிப்பாக தேசியக் கட்சிகளான பாஜக, காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் சிபிஐ (எம்) மற்றும் சிபிஐ போன்ற கட்சிகள் கர்நாடகாவில் ஒரு கருத்தையும் தமிழ்நாட்டில் அதற்கு நேர் எதிரான கருத்தையும் வெளிப்படுத்துகின்றனர். இந்த அழுகிப் போன சுரண்டல் அமைப்பின் வாழ்நாளை நீட்டிக்க விரும்பும் முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ மற்றும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள் மற்றும் கட்சிகளும் நடத்தும் இந்த நயவஞ்சக நாசகார விளையாட்டிற்கு பலியாகிவிடவேண்டாம் என்று கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டு மக்களை, குறிப்பாக விவசாயிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

மாறாக அவர்கள் ஒன்றுபட்டு நீர் மேலாண்மை, காடுவளர்ப்பு, நுணுக்கமான நில பயன்பாடு போன்றவற்றில் விஞ்ஞானபூர்வ நடவடிக்கைகளை சரியாக அமல்படுத்தி மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் இப்பிரச்சினையைத் தீர்க்கக் கோரி ஒன்றுசேர்ந்து குரலெழுப்பவேண்டும்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)

# ஏகபோகங்களின் தேவைக்காக பொருளாதார அதிகாரத்தை மையப்படுத்தும் நடவடிக்கை

கடந்த 2009ம் ஆண்டு முதன்முதலாக அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐமு கூட்டணி அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டு 8 ஆண்டுகளாக இந்திய அரசாங்கத்தால் திரும்பத் திரும்ப பேசப்பட்டுவந்த சரக்கு மற்றும் சேவை வரி (Good and Sales Tax-GST) ஒரு வழியாக கடந்த 7.08.2016 அன்று நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்று சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவிற்கு அஇஅதிமுக நீங்கலாக பிற கட்சிகள் அனைத்தும் சிபிஐ (எம்) உட்பட ஆதரித்து வாக்களித்துள்ளன. மிகவும் சர்ச்சைகளை ஏற்படுத்திய இம்மசோதா இறுதியில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மிக உச்ச பட்சமாக 18 சதவிகிதம் மட்டுமே வரி விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து காங்கிரசும் இன்னும் சில கட்சிகளும் இம்மசோதா விற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தன. இக்கோரிக் கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதையடுத்து இதற்கு ஆதரவு தெரிவித்து மசோதா நிறைவேற ஜனநாயகக் கடமை ஆற்றியுள்ளதாக சிபிஐ (எம்) உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. அதாவது இனி இம்மசோதா மக்கள் விரோதமான தல்ல என்று நாட்டை நம்ப வைக்க இவர்கள் முற்படு கிறார்கள். இது தவிர இம்மசோதாவால் மாநில அரசாங்கத்திற்கு வரி வருவாய் இழப்பு ஏற்படுவதை சரிக்கட்டுவதற்கு உரிய இழப்பீடுகள் வழங்குவதற் கான ஷரத்து இம்மசோதாவில் சேர்க்கப்பட்டபின் இம்மசோதாவின் அதிகார மத்தியத்துவம் என்ற பண்பு நீங்கி இந்தியாவின் மாநில சுயாட்சிக்கு பங்கம் ஏற்படவில்லை என்றும் நாட்டை இக்கட்சிகள் நம்பவைக்க முயல்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் உண்மையிலேயே இம்மசோதா அரசாங்கமும் பாராளுமன்றக் கட்சிகளும் கூறுவது போல் வரி ஏய்ப்பை ஒழித்து வரி வருவாயைக் கூட்டி வரிவிதிப்பு முறையை சுலபமாக்கக்கூடியதுதானா? அதேபோல் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி கூறுவது போல ஜிஎஸ்டி வரியானது இந்தியாவை ஒற்றை பொதுச்சந்தையாக மாற்றி வரி மீது வரி விதிக்கப்படுவதை தடுத்து சரக்குகளையும் சேவைகளையும் மலிவாக்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஆண்டுக்கு 2% என்ற அளவிற்கு உயர்த்தக்கூடியதுதானா? இக்கேள்விகளை நாம் ஆழமாக அலசி ஆராயவேண்டியுள்ளது.

ஆனால் அதற்கு முன்னதாக ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன அத்தகைய கருத்து உருவாகக் காரணமாக இருந்த சூழ்நிலை என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

### இந்தியாவில் நடைமுறையில் உள்ள வரிகள்

இந்தியாவில் தற்போது பல்வேறு பெயர்களில் வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன. மத்திய கலால் வரி, மதிப்புக்கூட்டு வரி, ஆக்ட்ராய் வரி, நுழைவுக்கட்டணம், சுங்க வரி, கேளிக்கை வரி, கவுண்டர்வைலிங் வரி (கவுண்டர்வைலிங் வரி என்பது இங்கிருக்கும் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கலால் வரி அதாவது உற்பத்தி வரி கட்டுவது போல் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் கலால் வரி செலுத்த வேண்டும் என்ற நோக்கில், வேறு வகையில் சொல்வ தானால் ஒரு பொருளை இறக்குமதி செய்கையில் அதே பொருளை உற்பத்தி செய்யும் இங்கிருக்கும் உற்பத்தியாளர்கள் பாதிப்படையக்கூடாது என்ற நோக்கத்தில் விதிக்கப்பட்டதாகும் ) மற்றும் சேவை வரி எனவும் இன்னும் இதுபோன்ற பல்வேறு வரிகளும் வழக்கத்தில் உள்ளன. இனி இவ்வரிகள் எல்லாவற்றிற்கும் பதிலாக இவை அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் ஜிஎஸ்டி வரி மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்று கூறப்படுகிறது. அதாவது இனி அனைத்து சரக்குகள் மற்றும் சேவைகள் மீதும் ஜிஎஸ்டி வரி என்ற ஒற்றை வரி மட்டுமே விதிக்கப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள பல வரி விதிப்பு முறை ஏராளமான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது என ஜிஎஸ்டி வரிக்கு வக்காலத்து வாங்குவோர் கூறுகின்றனர். வரி ஏய்ப்பு முதற்கொண்டு தவறாக வரி கணக்கிடல் மற்றும் அதைத்தொடர்ந்து வரித் தகராறுகள் என பிரச்சினைகள் பல எழுகின்றன. தவிர அந்நிய நேரடி முதலீடு கூட்டுத் தொழில் முதலீடு உபாயகரமான தொழிற்கூட்டுகள் போன்ற வழிகளின் மூலம் இந்திய சந்தைக்குள் மென்மேலும் அதிகமாக அந்நிய தொழில் நிறுவனங்கள் நுழை வதால் வரி விதிப்பு முறையை சீர்ப்படுத்த வேண்டியது அவசரத்தேவையாகிவிட்டது. மேலும் பல்வகை வரி விதிப்பின் பக்க விளைவாக இரட்டை வரி விதிப்பு அல்லது வரி மேல் வரி விதிப்பு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி ஜிஎஸ்டி வரி இப்பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துவிடும் என்று அதற்கு வக்காலத்து வாங்குவோர் கூறுகின்றனர். பொருட்களை நுகர்வோர் சப்ளை சங்கிலித்தொடரில் கடைசியாக அப்பொருளை அவருக்கு விற்கும் டீலர் விதிக்கும் வரியை மட்டும் கட்டினால் போதுமானது என்றும் இவர்கள் கூறுகின்றனர். இதனால் முந்தைய கட்டங்கள் அனைத்திற்குமான செட்ஆஃப் பலன் நுகர்வோருக்கு கிடைக்கும் என்கின்றனர். (அதாவது சப்ளை சங்கிலித் தொடரில் முன்னதாக கட்டப்பட்ட வரியானது பிந்தைய கட்டத்தில் கட்டப் படவேண்டிய வரியிலிருந்து கழிக்கப்பட்டுவிடும்). சப்ளை சங்கிலித் தொடர் என்பது ஒரு தொழில்நுட்ப பதம் என்பதை அறிக. மூலப்பொருட்களை கொள் முதல் செய்வதிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை சில்லரை வணிக கடையில் இறுதியாக நுகர்வோருக்கு விற்பது வரையான மதிப்பு கொண்டு சேர்த்தல், அதாவது டெலிவரி (Value Delivery System) பொறியமைவு (Machanism) சம்பந்தப்பட்ட வார்த்தையாகும் இது.

நிறுவனத்திற்கும் அதன் நுகர்வோருக்கும் இடையே முக்கியமான பிணைப்பை ஏற்படுத்து கின்ற சப்ளை சங்கிலித் தொடரில் மேலடுக்குப் பாதையிலும் கீழடுக்குப் பாதையிலும் உள்ள பல்வேறு வணிகக்கூட்டாளிகள் இப்பொறியமை வில் அடங்குவர். கம்பெனியிலிருந்து வரும் மேலடுக்கு பாதை என்பதில் மூலப்பொருட்கள், கருவிகள், பாகங்கள், தகவல்கள், நிதி, அப்பொருள் அல்லது சேவையை வழங்குவதற்கான நிபுணத்துவம் ஆகியவற்றை வழங்குவோர் அடங்குவர். அதேபோல் சந்தைப்படுத்துதலுக்கான தடத்தில் பங்குபெறுவோர் அதாவது மொத்த விற்பனையாளர், சில்லரை வணிகர் போன்றோர் கீழடுக்கு பாதையில் இடம் பெறுவர். பொருளாதாரவியலைப் பொறுத்தமட்டில் சப்ளை சங்கிலித்தொடரின் ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பு கூட்டல் நிகழும். இதற்கான உதாரணம் ஒன்றைத் தருகிறோம்.

பஞ்சானது சுத்திகரிக்கப்பட்ட நூலாக திரிக்கப் படுகையில் அதில் ஒரு மதிப்புக் கூட்டல் நிகழ்கிறது. இந்த பருத்தி நூல் தறி நூலாகவும் ஊடுநூலாகவும் பின்னப்பட்டு சாயமேற்றப்படுகையில் மற்றுமொரு மதிப்புக்கூட்டல் நிகழ்கிறது. இந்நூல் தறியில் ஏற்றப் பட்டு துணிகளாக நெய்யப்படுகையில் மேலுமொரு மதிப்புக்கூட்டல் ஏற்படுகிறது. பின்னர் இத்துணியின் மீது பல வண்ண வடிவங்கள் அச்சிடப்படுகையில் (பிரிண்டிங்) இன்னமொரு மதிப்புக்கூட்டல் நிகழ்கிறது. இவ்வாறாக மூலப்பொருள் ஒன்று முடிவான நுகர்பொருளாக மாற்றப்படுகையில் பல்வேறு கட்டங்கள் ஒவ்வொன்றிலும் மதிப்புக் கூட்டல் நிகழ்கிறது. இவ்வாறு மதிப்புக் கூட்டல் நிகழ்கையில் அதன் விலை எவ்வாறு உயருகிறது என்பதை மற்றொரு எளிமையான உதாரணம் மூலமாக அறிவோம்.

ஒரு மருந்துப்பட்டியின் (medicine strips) விலை தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகையில் ரூ100/= எனக்கொள்வோம். இதற்கு கலால் வரியும் சேவை வரியும் தலா ரூ10.00 விதிக்கப்படுவதாகக் கொள்வோம். இப்போது இப்பட்டியின் விலை ரூ120.00ஆக உயருகிறது. இந்த ரூ120.00ன் மீது மாநில அரசாங்கம் 10% மதிப்புக்கூட்டு வரி விதிப்ப தாகக் கொள்வோம். இனி அப்பட்டியின் விலை ரூ132.00 (100+20+12) ஆகும். அதாவது ஏ என்பவர் பி என்பவருக்கு பொருளை விற்கையில் விற்பனை வரி விதித்து அதை வசூலித்துவிடுகிறார். பின்னர் பி என்பவர் சி என்பவருக்கு அதே பொருளை விற்கையில் விற்பனை வரி விதிக்கிறார். இவ்வாறு அவர் விற்பனை வரி விதிக்கையில் பொருளின் மூல விலைக்கு மட்டும் விற்பனை வரி விதிப்ப தில்லை. மாறாக ஏ யிடமிருந்து அப்பொருளை வாங்கும்போது விற்பனை வரியுடன் சேர்த்து எந்த விலைக்கு வாங்கினாரோ அந்த தொகைக்கு மீண்டும் விற்பனை வரி விதிக்கிறார். அதாவது ஏற்கனவே தான் கட்டிய விற்பனை வரிக்கும் சேர்த்து தனது வாடிக்கையாளரிடம் விற்பனை வரி வசூலிக்கிறார். இதுதான் வரி மீது வரி விதிப்பது அல்லது இரட்டை வரி என்றழைக்கப்படுகிறது.

வரி விதிப்பில் அடுக்கடுக்கான வரியின் தாக்கத்தை மேலும் ஆழமாக புரிந்துகொள்வதற்கு மற்றுமொரு உதாரணத்தை இங்கே தருகிறோம். இலவம் பஞ்சிலிருந்து தலையணை உற்பத்தி செய்து அதை சந்தையில் விற்கையில் மதிப்புக்கூடும் கட்டம் அதாவது சப்ளை சங்கிலித்தொடரின் ஒவ்வொரு கட்டத்திலும் அதன் விலை எவ்வாறு கூடுகிறது என்று இந்த உதாரணத்தில் காண்போமாக.

உதாரணமாக, ஒரு அலகு (யூனிட்) இலவம் பஞ்சிலிருந்து ஒரு அலகு உழைப்பு செலுத்தி ஒரு அலகு தலையணை தயாரிக்கப்படுவதாகக் கொள்வோம். இதில் வரி விதிப்பிற்கு முன்பு ஒரு அலகு இலவம் பஞ்சின் விலை ரூ100 என்றும் ஒரு அலகு உழைப்பின் விலை ரூ100 என்றும் கொள்வோம். இதற்கு 20% லாபம் வைக்கப்படு வதாகவும் இலவம் பஞ்சு தலையணை ஆகிய இரண்டின் மீதும் தலா 10% மறைமுக வரி விதிக்கப் படுவதாகவும் கொள்வோம். இதன்படி தலை யணையின் விலையைக் கணக்கிடுவோமாக:

| | |
|---|---|
| இலவம் பஞ்சின் விலை | : ரூ100 |
| 10% மறைமுக வரியுடன் | : ரூ110 |
| உழைப்புக்கூலி (ரூ.100உடன்) | : ரூ210 |
| 20% லாபத்தைச் சேர்த்தால் | : ரூ252 |
| தலையணை மீதான 10% மறைமுக வரியுடன் | : ரூ277.20 |

இந்நேர்வில் இலவம் பஞ்சின் மீதான மறைமுக வரியாக ரூ10ம் தலையணை மீதான மறைமுக வரியாக ரூ25.20ம் விதிக்கப்படுகிறது. இதில் தலையணை மீதான வரியான ரூ25.20ல் ஏற்கனவே செலுத்தப்பட்ட வரித்தொகையான ரூ10க்கான வரியாக ரூ1.20ம் அடங்கும். அதாவது ஏற்கனவே விதிக்கப்பட்ட வரி மீது மீண்டும் ஒரு முறை வரிவிதிக்கப்படுவது இதன் மூலம் தெளிவாகிறது. இதைத்தான் அர்த்தமற்றது என சொல்கிறார்கள். வரி என்பது செயல்பாடுகள் அல்லது பணிகளின் ஒவ்வொரு மட்டத்திலும் விதிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அதாவது சப்ளை சங்கிலித்தொடரின் ஒவ்வொரு கட்டத்திலும் எந்த அளவிற்கு மதிப்பு கூட்டப்படுகிறதோ அந்த அளவிற்கேற்ப வரி விதிப்பதே அர்த்தமுள்ளது என்று கூறப்படுகிறது.

வரி விதிப்பில் காணப்படும் இந்த அர்த்தமற்ற தன்மையை ஜிஎஸ்டி நீக்கிவிடும் என்று வாதிடப் படுகிறது. தற்போதைய வரிவிதிப்பு முறையில் உற்பத்தி மட்டத்தில் அனைத்து வரிகளும் வசூலிக்கப் படுகின்றன. ஆனால் ஜிஎஸ்டியானது நுகர்வை அடிப்படையாகக் கொண்ட வரிவிதிப்பு முறையாகும் என்றும் இறுதியாக சேருமிடம் கோட்பாடு (Destination Principle) என்ற முன்மொழிவின்படி இயங்கக்கூடியது என்றும் கூறப்படுகிறது. தற்போதைய முறையில் உற்பத்தி மையத்திலிருந்து சரக்குகள் அனுப்பப்படும்போது கலால் வரியும் இச்சரக்குகளை டெலிவரி செய்யும் இடத்தில் வாட் எனப்படும் மதிப்புக்கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது. இந்நடை முறைக்குப் பதிலாக சேவைகளும் சரக்குகளும் இறுதியாக நுகரப்படும் இடத்தில் ஜிஎஸ்டி வரி விதிக்கப்படும். வேறு வார்த்தைகளில் சொல்வ தானால் சப்ளை செய்யும் சமயத்தில்தான் ஜிஎஸ்டி வரி கட்டுவதற்கான பொறுப்பு தோன்றும். அதாவது சப்ளை சங்கிலித்தொடரில் ஒவ்வொரு கட்டத்திலும் நிகழும் விற்பனை அல்லது கொள்முதலின்போது ஜிஎஸ்டி வரி செலுத்தப்படும். சரக்குகளும் சேவை களும் கொள்முதல் செய்யப்படுகையில் செலுத்தப் பட்ட ஜிஎஸ்டி வரியானது அச்சரக்குகளும் சேவை களும் சப்ளை செய்யப்படுகையில் செலுத்தப்படும் ஜிஎஸ்டி வரியிலிருந்து நீக்கப்படும். இவ்வாறு செய்வதற்கு ஏதுவாக ஒரு பொறியமைவு (mechanism) ஏற்படுத்தப்படும். வரி வரவு

தொடர்ச்சி 4ம் பக்கம்

# சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)

# ஒரு முதலாளித்துவ நாட்டில் ஜிஎஸ்டி போன்ற சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வித நன்மையும் பயக்காது

3ம் பக்கத் தொடர்ச்சி

பொறியமைவு எனப்படும் இப்பொறியமைவு வாயிலாக உற்பத்தியாளரோ அல்லது மொத்த விற்பனையாளரோ அல்லது சில்லரை வர்த்தகரோ யாராயினும் உரிய ஜிஎஸ்டி வரி செலுத்தியபிறகு சங்கிலித்தொடரில் முன்னதாக செலுத்தப்பட்ட வரியை மீளப்பெறலாம்.

இறுதியாக சேருமிடம் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதால் ஜிஎஸ்டி வரி யானது மூன்று வகைப்படும். சிஜிஎஸ்டி எனப்படும் மத்திய ஜிஎஸ்டி, எஸ்ஜிஎஸ்டி எனப்படும் மாநில ஜிஎஸ்டி மற்றும் மாநிலங்களுக்கிடையேயான ஜிஎஸ்டியான ஐஜிஎஸ்டி ஆகியனவே இம்மூன்று வகை ஜிஎஸ்டியாகும். உதாரணத்திற்கு ஒரு மூலப் பொருள் திருச்சியிலிருந்து கோவைக்கு விற்கப் படுகையில் ஒரே மாநிலத்திற்கிடையேயானதால் அந்நேரில் சிஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி ஆகிய இரண்டும் விதிக்கப்பட்டு விகிதாச்சாரப்படி மத்திய, மாநில அரசுகளுக்கு அவ்வரித்தொகை சென்றடையும். அம்மூலப்பொருள் கோவையில் பொருளாக செய்யப்பட்டு சரக்காக மாற்றப்பட்டு சென்னைக்கு அனுப்பப்படுகையில் அதன் மீதான மதிப்பு கூட்டப்படுவதால் மீண்டும் சிஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி ஆகிய இரண்டும் விதிக்கப் பட்டு விகிதாச்சாரப்படி மத்திய, மாநில அரசுகளுக்கு அவ்வரித்தொகை சென்றடையும். அதே பொருள் சென்னையிலுள்ள மொத்த விற்பனையாளரி மிருந்து கட்டாக்கிலுள்ள சில்லரை விற்பனை யாளருக்கு அனுப்பப்படுவதாகக் கொள்வோம். அப்போது இரு வேறு மாநிலங்களுக்கிடையே சரக்கு பரிமாற்றம் நடைபெறுவதால் ஐஜிஎஸ்டி மட்டும் விதிக்கப்பட்டு மொத்த வரித்தொகையும் மத்திய அரசாங்கத்தை சென்றடையும்.

இறுதியாக விற்கப்படும் விலை அல்லது சில்லரை விற்பனை விலையோடு ஒன்றிணைந்த ஜிஎஸ்டி சேர்க்கப்பட்டு கடைசியாக அப்பொருளை நுகர் வோரிடமிருந்தே மொத்த ஜிஎஸ்டியும் வசூலிக்கப் படும் என்பது தெளிவு. அதாவது எத்தனை இடங்களை சரக்குகள் கடந்து வந்திருக்கின்றது என்பதைப் பொருத்தும் இறுதியாக எங்கே டெலிவரியாகிறது என்பதைப் பொருத்தும் இறுதி விலை நிர்ணயிக்கப்படும்.

பல்பெருக்கு வரிகளை (Multiple) ஜிஎஸ்டி வரியோடு முறைப்படுத்துவதன் மூலம் வரி விதிப்பு முறையில் இரட்டை வரிவிதிப்பு நீக்கப்படுவதால் இறுதியாக நுகர்வோர் கொடுக்கவேண்டிய விலை குறையும் என்று ஜிஎஸ்டிக்காக வக்காலத்து வாங்கு வோர் கூறுகின்றனர். உற்பத்தி செய்யப்படும் நுகர்வோர் சரக்குகளுக்கு தற்போதைய வரிவிதிப்பு முறையில் கலால் வரி (அதிகபட்சமாக 12.5%) மற்றும் மதிப்புக் கூட்டு வரி (VAT) காரணமாக உற்பத்தி செலவைக்காட்டிலும் ஏறக்குறைய 25–26% அதிகமாக நுகர்வோர் விலை கொடுப்பதாக அவர்கள் கூறுகின்றனர். ஜிஎஸ்டி வரி விகிதம் எவ்வளவு இருக்கும் என்று உறுதியாக இன்னமும் தெளிவாக்கப்படவில்லை. இம்மசோதாவை நிறை வேற்றுவதற்காக அதிகபட்சமாக 18 சதவிகிதம் என்று மத்திய அரசு கூறியுள்ளபோதினும் இது 22 சதவிகிதம் வரை உயரும் என்று அரசாங்கத்திற்கு நெருக்கமாக உள்ளோரும் விமர்சகர்களும் கருத்து தெரிவிக்கின்றனர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகளின் விலை ஓரளவிற்கு குறையும் என்று அவர்கள் திடமாகக் கூறுகின்றனர்.

ஆனால் வரைவு முன்மாதிரி ஜிஎஸ்டி சட்டத்தில் மிக அற்புதமான நிபந்தனை ஒன்று உள்ளது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல வரி மீது வரி விதிப்பதை ஒழிப்பதற்காக ஜிஎஸ்டி கொண்டுவரப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஏனெனில் பொருட் களையோ சேவைகளையோ வாங்குபவர் செலுத்த வேண்டிய வரியிலிருந்து அவற்றை விற்பனை செய்தவர் அவற்றை தயாரிப்பதற்காக நடத்திய கொள்முதல் மீது செலுத்திய வரியை உள்ளீட்டு வரி வரவிலிருந்து (Input Tax Credit) திரும்பப்பெற்றுக் கொள்ளலாம் என இச்சட்டம் வழிவகை செய்கிறது. ஆனால் விற்பனை செய்பவர் தான் செலுத்த வேண்டிய வரியை செலுத்திவிட்டாரா என சரிபார்க்கும் பொறுப்பை வாங்குபவர் மீது இந்த வரைவுச்சட்டம் சுமத்துகிறது.

இப்படிப்பட்டதொரு கடுஞ்சுமையான ஷரத்தை அமல்படுத்துவது எந்த அளவிற்கு சாத்தியமானது என்று ஏற்கனவே முணுமுணுப்புகள் எழுந்துள்ளன. எனவே நிபுணர் வட்டாரங்களில் இதுகுறித்து எழும்பும் முணுமுணுப்புகளை புறந்தள்ளிவிட முடியாது. இந்த உள்ளீட்டு வரிவரவை அமல் படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டு சாத்தியமில்லாமற் போகுமானால் இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது. அத்தகைய சூழ்நிலையில் வரி மீதான வரி விதிப்பை எவ்வாறு தவிர்க்க முடியும்? அவ்வாறு வரி மீது வரி தொடருமாயின் தற்போதைய வரிவிதிப்பு முறையிலிருந்து புதிய ஜிஎஸ்டி முறை எவ்வாறு சிறந்ததாகக் கூற முடியும்?

சாலப்பொருத்தமான இக்கேள்விகள் அனைத் திற்கும் விடை காண்பதற்கு முதற்கண் இந்த ஜிஎஸ்டி முறைக்குப் பின்னாலுள்ள கோட்பாட்டில் உண்மையிலேயே ஏதேனும் புதுமை இருக்கிறதா எனக் காண்போம். இதை அறிவதற்கு நாம் சற்றே பின்னோக்கி 2005ம் ஆண்டிற்கு சென்று அப்போது கொண்டுவரப்பட்ட மதிப்புக்கூட்டு வரியை சற்றே ஆராய்வோம்.

### மதிப்புக்கூட்டு வரி கொண்டு வருவதற்கு நியாயப்படுத்தப்பட்ட காரணங்கள்

1.4.2005 முதல் மதிப்புக்கூட்டு வரி அமலாக்கப் படுவதற்கு முன்பு மறைமுக வரி என ஒன்று கிடையாது. அச்சூழ்நிலையில் நேரடி வரிகளான வருமான வரி நகராட்சி வரி சொத்து வரி போன்ற நேரடி வரிகள் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துவதற்கு போது மானதாக இல்லை என்று வரிக்கொள்கைகளை வகுப்போர் வாதிட்டு வந்தனர். எனவே மிகச் சொற்பமான வருமானம் மட்டுமே ஈட்டுகின்ற பரம ஏழைகள் நேரடி வரியை கட்டிட இயலாது. ஆனால் அவர்களையும் வரி கட்ட வைத்திட வேண்டும். இவ்வாறாக உருவானதுதான் மறைமுக வரி என்ற கருத்தியலாகும். சேவைகள் மற்றும் சரக்குகளுக்கான இறுதியான சந்தை விலையின் ஓர் அங்கமாக விதிக்கப்பட்ட மறைமுக வரி சாமானிய மக்கள் தலையில் சுமத்தப்பட்டது. இது குறித்து மத்திய, மாநில முதலாளித்துவ அரசாங்கங்கள் மறைத்த இன்றளவும் மறைக்கின்ற உண்மையை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அரசு கஜானாவில் நிதி இல்லாமற் போவதற்குக் காரணம் நேரடி வரிகள் மூலம் ஈட்டப் படும் வருவாய் போதுமானதாக இல்லாததால் அல்ல. மாறாக பெரும் தொழில் நிறுவனங்கள் ஏகபோக சுறாக்கள் கையளவேயான கொழுத்த பணக்காரர்கள் போன்றோர் விதிகளையும் சட்டங் களையும் தம்மிஷ்டத்திற்கு வளைத்து சற்றும் உறுத் தலின்றி அரசாங்கத்தை ஏமாற்றி பொய்க்கணக்கு காட்டி வரிகட்டாமலும் வரிஏய்ப்பு செய்வதாலுமே அரசுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படுகிறது. உண்மை யான வருமானத்தை மறைத்து பொய்க்கணக்கு காட்டும் இவர்கள் ஏராளமான அளவிற்கு கறுப்புப் பணத்தை உருவாக்கி பொருளாதார அமைப்பு முறையையே குலைத்துவிடுகிறார்கள். இவையனைத் திற்கும் மேலாக பெரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஏகபோகங்களுக்கு அநியாயமான அர்த்த மற்ற வரிச்சலுகைகளும் வரி விலக்குகளும் அளித்து வேண்டுமென்றே வரி ஏய்ப்பு செய்தோருக்கு பொறுப் பற்ற முறையில் பொது மன்னிப்பு வழங்குவதாலும் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாயில் பெரும் துண்டு விழுகிறது. எனவே ஏற்கனவே முதலாளித்துவ சுரண்டலெனும் நுகத்தடியில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கான ஏழைகளை மேலும் ஒட்டஒட்ட உறிஞ்சு வதற்காக தொடர்ந்து மறைமுக வரியை அதிகரித்துக் கொண்டே போவதற்காக கூறப்படும் சாக்குப்போக்கு என்பது கிரிமினல்தனமான ஏமாற்றுமாகும். இது நிற்க, நாம் மீண்டும் மதிப்புக்கூட்டு வரிக்கு வருவோம்.

எனவே முதலாளித்துவ உலகமயம் தாராள மயத்தின் ஆணைகள் அமலாக்கப்பட்டதையடுத்து அதிகரிக்கப்பட்ட மறைமுக வரிச்சுமை முழுவதையும் சாமானிய மக்களின் தலையில் சுமத்தும் கொள்கைக் கேற்ப வாட் எனப்படும் மதிப்புக்கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைய மத்திய நிதியமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்ட மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரமளிக்கப்பட்ட கமிட்டி யானது 17.01.2005 அன்று வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் காணப்படுவதும் அக்கமிட்டியின் கன்வீனரும் அப்போதைய மேற்கு வங்க சிபிஐ (எம்) அரசாங்கத்தின் நிதி அமைச்சருமான அசிம் தாஸ்குப்தா கூறியதுமாவது: ... தற்போது நடை முறையில் உள்ள பல்வேறு வரிகளான மொத்த பரிமாற்ற வரி (Turn over Tax) விற்பனை வரி மீதான சர் சார்ஜ் கூடுதல் சர் சார்ஜ் சிறப்பு கூடுதல் வரி இன்னபிற வரிகள் ஆகியவற்றின் சுமைகளை வாட் வரி ஒழித்துவிடும்... வரி செலுத்துவதற்கான கடமையை வாட் வரி அதிகரித்து வருவாய் வளர்ச்சியை முடுக்கிவிட்டு... இவ்வகையில் சாதாரண மக்களுக்கு வர்த்தகர்களுக்கு தொழில திபர்களுக்கு மற்றும் அரசாங்கத்திற்கும் கூட உதவும். வாட் வரியை அறிமுகப்படுத்தியபோதுகூட சப்ளை சங்கிலித்தொடரில் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ளீட்டு வரியின் பலன்களை அளிப்பதன் மூலம் அப்போது நடைமுறையில் இருந்த வரி மீது வரி அல்லது இரட்டை வரியை வாட் வரி ஒழித்துவிடும் என்று அப்போது கூறப்பட்டது. சொல்லப்போனால் 2004ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சென்வாட் (மத்திய மதிப்புக்கூட்டு வரி) வரவுத் திட்டத்தில் கூட (முன்னர் இது மோட்வாட் (Modified Value added Tax) என அழைக்கப்பட்டது). உள்ளீட்டு கட்டங்களில் செலுத்தப்பட்ட கலால் வரி வரவானது சரக்குகள் வெளியேற்றப்படும்போது செலுத்த வேண்டிய கலால் வரியிலிருந்து விலக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதே வாதங்கள்தான் இப்போது ஜிஎஸ்டியிலும் முன்வைக்கப்படுகின்றன பழைய கள் புதிய மொந்தையில் என்பது போல. இதில் கூடுதலாக மற்றொரு சர்க்கஸ் வித்தையும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. பல் பெருக்கு வரிகளுக்கு பதிலாக ஒற்றை வரி என்பதே அந்த கண்கட்டு வித்தையாகும்.

### வாட் வரி மக்களுக்கு நிவாரணம் ஏதேனும் வழங்கியுள்ளதா ?

வாட் வரி விலைக்குறைவு உள்ளிட்ட நிவாரணங் களை மக்களுக்கு வழங்கும் என்று அப்போது அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேறினவா என்று பார்ப்போம். வாட் வரியின் விளைவாக ஒன்றை மட்டுமே கூற முடியும். வரி கணக்கீட்டில் உள்ள நடைமுறை சிக்கல்கள் மட்டுமே அதிகரித்தன. இதனால் வரி விதிப்பு மற்றும் வரி வசூலித்தல் முறையில் ஏற்கனவே இருந்த முறைகேடுகள் அதிகரித்தன. வரி கணக்கீட்டாளர்கள் (அ) செலுத்து வோர் மீதான கொடுமை பன் மடங்கு அதிகரித்தது. இதனால் வரி செலுத்துவோர் ஊழல் மலிந்த வரித்துறை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து இந்த சிக்கல்களிலிருந்து மீண்டனர். அல்லது ஊழல் மலிந்த நிர்வாகத்தின் துணையோடு மிகச் சாதுர்யமாக வரி ஏய்ப்பு செய்தனர். அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக சரக்குகள் மற்றும் சேவை களின் அடிப்படை விலையோடு வாட் வரி சேர்க்கப் பட்டதால் இறுதியாக நுகர்வோர் அப்பொருள் அல்லது சேவைக்கான விலையோடு; வாட் வரியையும் சேர்த்து கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். உள்ளீட்டு வரி நேர் செய்யப்படும் என்று சொல்லப்பட்ட பெரும் பேச்சுக்களெல்லாம் வெறும் வெற்று வார்த்தைகளென நிரூபணமாயிற்று. உண்மையில் அது மறைமுக வரியின் மூலம் மக்களை மேலும் சூறையாடிட ஏதுவாகவே அமைந்தது. மக்கள் வாழ்வை சூறையாடிக்கொண்டிருக்கும் விலைவாசி உயர்வு நின்றபாடில்லை.

ஏகபோக நிறுவனங்கள் வாட் வரி விதிப்பதற்கு ஏன் துடித்தன என்றும் அவர்களின் ஏவலாட்களாக விளங்கும் அரசாங்கங்களும் அவற்றின் அமைச்சர் கள் அரசியல்வாதிகள் பொருளாதார நிபுணர்களும் வாட் வரியை புதுமையானது என ஏன் போற்றினர் என்பதும் தற்போது நன்றாக விளங்கிவிட்டது. வாட் பற்றிய எங்களது ஆய்வுக்கட்டுரையில் (1.4.2005 நாளிட்ட பாட்டாளி சிந்தனையில் பிரசுரிக்கப்பட்டது வாட் வரியில் பொதிந்திருந்த கடுமையான அபாயங்கள் குறித்தும் இந்த அபாயத்திற்கு எவ்வாறு சாதாரண மக்களே

தொடர்ச்சி 5ம் பக்கம்

## சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)

# மக்கள் விரோத ஜிஎஸ்டியை உண்மையில் எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை

*4ம் பக்கத் தொடர்ச்சி*

*பலியாவர் என்றும் விளக்கியிருந்தோம். அப்போது ஏற்கனவே இருந்த நிதிச்சுமையோடு சாதாரண நுகர்வோர்தான் இந்த வரி அதிகரிப்பின் சுமையையும் தாங்கவேண்டியிருக்கும் ஏனெனில் இந்த கூடுதல் வரிச்சுமையானது இறுதி விலையில்தான் வந்து விடியும் என்றும் நாங்கள் அப்போதே அக்கட்டுரை யில் எச்சரித்திருந்தோம். மார்க்சிய பகுப்பாய்வு முறையியலின் அடிப்படையில் நாங்கள் வந்த முடிவும் எங்களது விளக்கமும் எவ்வளவு சரியானது என்பதை தற்போது அனுபவத்தின் வாயிலாக மக்கள் கண்கூடாகக் காண்கிறார்கள்.*

### வாட் வரிவிதிப்பு முறை உலகெங்கிலும் நாசத்தையே விளைவித்துள்ளது

*வாட் வரியை அறிமுகப்படுத்தும்போது அதற்காக அப்போது பிரச்சாரம் செய்த அனைவரும் இவ்வரி அமலாக்கப்பட்ட நாடுகள் அனைத்திலும் உழைக்கும் மக்களுக்கு நற்பலன்களையே அளித்துள்ளது என்று தம்பட்டம் அடித்தனர். இதற்கு உதாரணமாக காட்டப் பட்ட நாடுகளில் ஒன்று பிரேசில் ஆகும். ஆனால் இன்று பிரேசிலின் நிலையைப் பாருங்கள். எக்கச்சக்க மான விலையேற்றத்தின் சுமை அம்மக்கள் மீது சுமத்தப்பட்டு அதன் பொருளாதாரம் முழுவதுமாக சிதிலமடையும் நிலையில் உள்ளது. இதிலிருந்து நாம் கற்கவேண்டிய பாடம் ஒன்றுள்ளது. முதலாளித் துவத்தின் அடிப்படைவிதிகளிலிருந்து விலகி நின்று பொருளாதார மறுகட்டுமானத்தையோ அல்லது நிதி சீர்திருத்தங்களையோ அல்லது வரி பொறியமைவை மாற்றியமைப்பதையோ செய்ய முற்பட்டால் வரி சீர்திருத்தங்கள் மூலம் மக்களுக்கு சில உதவிகளைப் பற்றி கண்டபடி ஊகங்கள் செய்து பெரும் குழப்பத்தில் தான் வீழ்வரேயன்றி உருப்படியாக எதையும் செய்ய முடியாது என்பதே அப்பாடமாகும்.*

*இரண்டாவதாக முதலாளித்துவ பொருளாதார கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலேயே வாட் வரிமுறை குறித்து அப்போது கருத்து வேறுபாடுகள் நிலவின. வாட் வரி முறை நடைமுறையில் உள்ள நாடுகளில் மக்கள் மீதான மொத்த வரிச்சுமை யானது வாட் அல்லாத நாடுகளின் வரிச்சுமையைக் காட்டிலும் அதிகம் என்று வாட் எதிர்ப்பு தரப்பு வாதிடுகிறது. இதில் விந்தை என்னவென்றால் வாட் வரிமுறைக்கு இந்தியாவின் ஏகபோகங்கள் முன்வைத்த அதே வாதங்களைத்தான் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆளும் ஏகபோகங்களும் அதற்கு பத்தாண்டுகளுக்கு முன்னதாகவே முன்வைத்தனர். தற்போது அவ்வொன்றியத்தின் நிலை என்ன? கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்திப்பது மட்டுமின்றி ஐரோப்பிய ஒன்றியத்தின் தொடர் நிலவலே அபாயத்திற்குள்ளாகியுள்ளது. இப் பொருளாதார பின்னடைவுக்கு வாட் வரிமுறையே காரணம் என்று கூற வரவில்லை. ஆனால் ஒரு பொருளாதாரம் வாட் வரிமுறையை கொண்டிருக் கிறதோ இல்லையோ அதனால் ஒட்டுமொத்த பொருளாதார செயல்பாடுகளிலும்; நல்லதொரு பொருளாதார நிலையில் மக்கள் வாழ்வதிலும் எந்தவொரு மாற்றத்தையும் அது கொண்டுவரப் போவதில்லை. எனவே வரிச் சீர்திருத்தங்கள் மக்கள் பொருளாதார நிலையை நன் மாற்றங்களையோ கிஞ்சித்தேனும் நிவாரணங்களையோ கொண்டுவரும் என எதிர்பார்ப்பது வீண்.*

### ஜிஎஸ்டி வரிமுறையின் விளைவுகளும் மோசமானதாகவே இருக்கும்

*வாட் வரி குறித்து மேற்கண்ட விவாதமானது ஜிஎஸ்டியின் ஏமாற்றுத்தனம் குறித்து புரிந்து கொள்ள உதவும் என நம்புகிறோம். இது வரை உலகில் **160** நாடுகள் ஜிஎஸ்டி அல்லது விஎஸ்டி வரிமுறையைக் கொண்டிருக்கின்றன. **1954**ம் ஆண்டிலேயே முதன்முதலாக ஜிஎஸ்டி முறையை அமல்படுத்திய நாடு ஃபிரான்ஸ் ஆகும். இதனால் அங்கே எவ்வகையில் சாதாரண மக்கள் பயனடைந் திருக்கிறார்கள்? மக்களின் வரிச்சுமை குறைந்திருக் கிறதா? விலைவாசி குறைந்திருக்கிறதா? இல்லவே இல்லை. மாறாக இந்த ஒரே சீரான வரிச் சூத்திரத்தின் சூத்திரதாரிகள் என்னதான் புள்ளிவிவரங்கள் தரவுகள் கணக்குகளைக் கொண்டு வாதிட்டாலும் ஜிஎஸ்டியால் அதிக லாபம் ஈட்டி ஆதாயமடைந்தது பெரும் வணிகர்களேயாகும். ஏனெனில் முதலாவதாக நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல ஜிஎஸ்டி யானது இறுதியாக சேருமிடத்தை அடிப்படையாகக் கொண்ட வரிமுறையாகும். ஜிஎஸ்டிக்காக வக்காலத்து வாங்குவோரின் வாதம் யாதெனில் உற்பத்தி மீது வரி விதிப்பதை விட நுகர்வின் மீது வரி விதிப்பதே அதிக அர்த்தமுள்ளதாக இருக்கும் என்கின்றனர். இதற்காக அவர்கள் கற்பிக்கும் நியாயம் யாதெனில் ஒரு நபர் ஒரு பொருளை அல்லது சேவையை மனமுவந்து நுகர்வதால் அவர் அதற்காக வரி செலுத்துவதே சரியாக இருக்கும் என்பதாம். வருமான வரியிலோ அல்லது பிற நேரடி வரியிலோ ஒரு நபர் சேமித்தாலும் சரி நுகர்ந்தாலும் சரி அவர் தண்டிக்கப்படுகிறார். (அதாவது வரி விதிக்கப்படுகிறது) ஆனால் நுகர்வு கருத்தாக்கத்தில் ஒருவர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் நுகரும் போது மட்டுமே வரி விதிப்பிற்கு ஆளாகிறார். இதுதான் ஜிஎஸ்டியை வாதத்தின் மையப்புள்ளி யாகும். அதிகபட்ச லாபத்தை நோக்கமாகக்கொண்டு ஒரு முதலாளித்துவ உற்பத்தியாளரோ அல்லது முதலீட்டாளரோ சரக்கையோ சேவையையோ உற்பத்தி செய்யும்போது அவர் மீது வரி விதிக்கப் பட்டு தண்டிக்கப்படக்கூடாது. ஆனால் அப் பொருளையோ சேவையையோ நுகரும் சாதாரண மனிதன் வரி என்ற பெயரில் தண்டிக்கப்படலாம், அத்தகைய நுகர்வு அவனது வாழ்வின் அத்தியா வசியத் தேவைக்காக இருந்தாலும்கூட மடியும் தருவாயிலுள்ள இன்றைய முதலாளித்துவத்தின் பொருளாதார வல்லுநர்களின் அகராதிகளில் மட்டுமே காணப்படும் இத்தகைய கயமைத் தனமான வாதங்களுக்கு ஆதரவு தெரிவித்து இணையதள ப்ளாக்கர் ஒருவர் கைபேசிகளின் விலைகளை ஒப்பிட்டு அட்டவணைகள் தயாரித்து வெளியிட்டுள்ளார். இத்தகையோருக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை உண்மை நிலையை அம்பலப்படுத்தும்.*

*இந்த அட்டவணையை நன்றாகக் கவனியுங்கள். ஜிஎஸ்டி முறையில் விநியோகஸ்தர் அதிக லாபம் ஈட்டுவதைக் காண முடியும். அதே நேரத்தில் ஜிஎஸ்டி அல்லாத முறையில் பொருளின் விற்பனை விலை ரூ**15600** ஆகவும் ஜிஎஸ்டி முறையில் அதே பொருளின் விலை ரூ**17400** ஆகவும் இருப்பதையும் காணலாம். எனவே ஜிஎஸ்டி வரி முறையில் கடைசியாக பொருளை நுகர்பவர் அதாவது பொருளைப் பயன்பாட்டிற்காக வாங்கும் சாமானிய மனிதன் சந்தையில் அதிக விலை கொடுக்கவேண்டி யிருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு பொதுப் புத்தியே போதுமானதாகும். வாட் வரி முறையில் தற்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது? பொருளின் இறுதி விலையின் மீது மொத்த வாட் வரியான **15** சதவிகிதமும் போடப்பட்டு பொருளை வாங்குபவர் தலையில் கட்டப்படுகிறது. உள்ளீட்டு வரி வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கோ இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகளோ நுகர்வோருக்கு வழங்கப்படுவதில்லை. சப்ளை சங்கிலித் தொடரில் யார் எந்த கட்டத்தில் எவ்வளவு வரி செலுத்தப் போகிறார் என்பதைப் பற்றியெல்லாம் மறந்து விடுங்கள். ஜிஎஸ்டியிலும்கூட இதே பொறியமைவு தான் செயல்பட்டு ஒட்டுமொத்த ஜிஎஸ்டியும் இறுதியாக நுகர்பவர் தலையில் விடியப்போகிறது.*

*ஜிஎஸ்டி வரி **18.22** சதவிகிதமாக இருக்கப் போவதால் தற்போது **15** சதவிகித வரி விதிக்கப் படும் சேவைகள்கூட வரி கூட்டப்பட்டு அவற்றின் கட்டணங்கள் அல்லது விலை உயரக்கூடும் என்று ஒரு விமர்சகர் கருத்து தெரிவிக்கிறார். தவிர சமீப காலங்களில் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு ஏற்கனவே மிகவும் அதிகமாக உள்ள மறைமுக வரியோடு கூடவே அவ்வப்போது செஸ் கட்டணம் விதிப்பதை அரசாங்கம் வாடிக்கையாக கொண்டுள்ளது. சமீபத்தில்கூட தூய்மை இந்தியா செஸ் க்ரிஷ் கல்யான் செஸ் போன்றவை*

| | தற்போதைய நிலைமை | | ஜிஎஸ்டிக்குப் பின்னர் | |
|---|---|---|---|---|
| | பில்லுடன் | பில் இல்லாமல் | பில்லுடன் | பில் இல்லாமல் |
| உற்பத்தியாளரிடமிருந்து விநியோகஸ்தர் வரையில் | | | | |
| போன் விற்பனை விலை | 10,000 | 11,000 | 10,000 | 11,000 |
| கலால் வரியுடன்@12% | 1,200 | | | |
| கூட்டு மதிப்பு வரியுடன் @ 4% | 448 | | | |
| ஜிஎஸ்டி @ 16% வுடன் | | | 1600 | |
| **செலுத்தும் இறுதித்தொகை** | **11,648** | **11,000** | **11,600** | **11,000** |
| விநியோகஸ்தரிடமிருந்து மொத்த விற்பனையாளர் வரையில் | | | | |
| போனின் விற்பனை விலை | 15,000 | 15,000 | 15,000 | 15,000 |
| கூட்டு மதிப்பு வரியுடன் @ 4% | 600 | | | |
| ஜிஎஸ்டி @ 16% வுடன் | | | 2,400 | |
| **இறுதி வரவு** | **15,600** | **15,000** | **17,400** | **15,000** |
| விநியோகஸ்தர் கட்டிய வரி | 152 | | 800 | |
| விநியோகஸ்தரின் இறுதி லாபம் | | | | |
| விற்பனை விலை | 15,600 | 15,000 | 17,400 | 15,000 |
| வாங்கிய விலையை கழித்து | 11,648 | 11,000 | 11,600 | 11,000 |
| கட்டிய மொத்த வரியை கழித்து | 152 | | 800 | |
| **விநியோகஸ்தரின் இறுதி லாபம்** | **3,800** | **4,000** | **5,000** | **4,000** |
| இறுதி விளைவு | விநியோகஸ்தர் விலைப்பட்டியல் பில் இல்லாமல் இருப்பதையே விரும்புவார் | | விநியோகஸ்தர் விலைப்பட்டியல் பில் லுடன் இருப்பதையே விரும்புவார் | |

தொடர்ச்சி 6ம் பக்கம்

## சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)

# ஜிஎஸ்டியின் ஓட்டுமொத்த தாக்குதலை மக்கள் முறியடிக்க வேண்டும்

5ம் பக்கத் தொடர்ச்சி

விதிக்கப்பட்டதை நாம் அறிவோம். ஜிஎஸ்டி முறையிலும் தொடர்ந்து செஸ் விதிக்கப்படுமா என்பது பற்றி இன்னமும் தெளிவாகவில்லை. ஜிஎஸ்டி முறையில் செஸ் கட்டணங்கள் ஜிஎஸ்டி வரியில் உள்வாங்கப்படும் என்று முன்மாதிரி ஜிஎஸ்டி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இனி செஸ் கட்டணங்கள் விதிக்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் ஐயம் திரிபற கூறாத நிலையில் புதுப்புது செஸ் கட்டணங்களால் மக்களின் இரத்தம் மேலும் உறிஞ்சப்படாது என்று நம்புவதற்கு இடமில்லை.

### ஆசிய நாடுகளில் ஜிஎஸ்டி அனுபவங்கள்

ஜிஎஸ்டியின் நன்மைகள் குறித்து ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் பிரமாதமாக பேசினாலும் வாட் வரியைப் போன்றே ஜிஎஸ்டி வரியும் இதர நாடுகளில் மக்கள் வாழ்வில் நாசத்தையே கொண்டு வந்துள்ளது. உதாரணத்திற்கு மலேசியாவில் ஜிஎஸ்டி அமல்படுத்துப்பட்டதால் சாதாரண மக்கள் குறிப்பாக சம்பளம் வாங்குவோர் மிகுந்த துன்பங்களை சந்திக்கின்றனர். ஏனெனில் இவ்வரிமுறையானது பல எதிர்வினைகளை சங்கிலித்தொடர்போல உருவாக்கி விலைவாசியை உயர்த்திவிட்டது. அன்றாட வாழ்விற்கான பயன்பாட்டு பொருட்கள் அனைத்தும் கடுமையாக விலை உயர்ந்துவிட்டன. மலேசியாவின் இரண்டாவது பெரிய நகரமான பினாங்கில் ஒரு பலசரக்கு கடை வைத்திருப்பவர் தனது 45 ஆண்டுகால கடையை மூடிவிட்டார். காரணம் ஜிஎஸ்டி வரியின் சிக்கலான நடைமுறைகளை அவரால் கையாள முடியவில்லை. இக்கணக்குகளை பராமரிப்பதற்கு கணக்காளரை வேலைக்கு வைத்துக்கொள்ளும் அளவுக்கு அவருக்கு வசதியும் இல்லை. இரண்டாவதாக ஜிஎஸ்டி நடைமுறைக்கு வந்தபிறகு பொருட்களின் விலை அதிகரிப்பு முழுவதையும் வர்த்தகர்கள் நுகர்வோர் தலையில் சுமத்திவிட்டு நிம்மதியாக இருக்கின்றனர். இதனால் கடைசியாக இழப்புகளை சந்திப்பது வாடிக்கையாளர்களேயன்றி வேறல்லர். மிகக்குறைந்த வருமானம் ஈட்டுவோர் இந்த விலை உயர்வை சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இவர்களில் சிலர் திருட்டு கொள்ளை போன்ற ஈனக்குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் சமூகக் கேடுகளும் அதிகரிக்கின்றன. (ஆதாரம்: malaysianchinese-news.com dated 31-03-15)

### ஜிஎஸ்டியை அமல்படுத்த இந்திய அரசாங்கம் துடிப்பது ஏன்?

இவ்வளவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதென்றால் அப்படிப்பட்ட ஜிஎஸ்டி எதற்கு என்ற கேள்வி நம் மனதில் எழுவது இயல்பேயாகும். இதற்கான விடை மிக எளிமையானது. ஆளும் இந்திய ஏகபோக முதலாளித்துவத்திற்கு ஜிஎஸ்டி தேவையாகும். வரி கணக்கிடுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் வரி விதிப்பு அதிகாரத்தை அடர்த்தியாக்குவதன் அல்லது குவிப்பதன் மூலம் பெருந்தொழில் நிறுவனங்கள் கார்ப்பொரேட் சுறாக்கள் பெரும் வணிகர்கள் ஆகியோருக்கு நடைமுறைகளை எளிமையாக்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதே நோக்கம் என்பது தெளிவாகிறது. ஜிஎஸ்டி என்ற வடிவத்தில் அவர்கள் ஓட்டுமொத்த (கன்சாலிடேட்) வரியாக ஒரு தொகையைக் கட்டிவிட்டு அத்தொகையை அப்பொருள் அல்லது சேவையின் இறுதி விலையோடு சேர்த்து அதனை நுகர்வோரிடமிருந்து வசூலித்துவிடுவர். அதாவது தற்போது வாட் வரி மற்றும் சேவை வரி போன்றவை எவ்வாறு நுகர்வோரிடமிருந்து மொத்தமாக வசூலிக்கப்படுகின்றனவோ அதேபோலவேதான் நடைமுறையில் ஜிஎஸ்டியும் இருக்கும். இதனால் வரி விதிப்பில் உள்ள தகராறுகள் வெகுவாகக் குறையும். குறிப்பாக இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு வாயிலாகவோ அல்லது கூட்டு முதலீடுகள் மூலமாகவோ தொழில் நடத்தும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்கள் இந்தியாவில் இனி வரித்தகராறுகளை சந்திக்கவேண்டியிருக்காது. வரி விதிகளை சுலபமானதாக ஆக்குமாறு இந்தியாவை அந்நிய ஏகபோகங்கள் வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறு எளிமையாக்கும் பட்சத்தில் உச்சபட்ட லாபத்தை ஈட்டுவதிலும் ஈட்டிய லாபத்தை சுருட்டிக்கொண்டு இந்தியாவிலிருந்து ஓட்டம் பிடிப்பதிலும் எந்த தடையும் அவர்களுக்கு இனி இருக்காது. இது சம்பந்தமாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நோக்கியா செல்ஃபோன் தயாரிப்பு நிறுவனமும் ஓடஃபோன் செல்ஃபோன் சேவை நிறுவனமும் வரித்தகராறுகளில் சிக்கிக்கொண்டு நீதிமன்றங்களில் அலைக்கழிக்கப்பட்டதை நாம் நினைவுகூறுவது பொருத்தமாக இருக்கும். ஜிஎஸ்டி நடைமுறைக்கு வந்துவிட்டால் கொள்ளையடித்த லாபத்தை சுருட்டிக்கொண்டு ஓட்டமெடுப்பதில் இதுபோன்ற சட்டசிக்கல்கள் அவர்களுக்கு இருக்காது. அவர்கள் பாடு கொண்டாட்டம்தான். அதிலும் குறிப்பாக அந்நிய நேரடி முதலீட்டிற்கு மென்மேலும் பல துறைகள் திறந்துவிடப்பட்டபிறகு பாதுகாப்புத்துறை சில்லரை வர்த்தகம் மருந்துகள் கல்வி நிதிநிறுவனங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்ய யத்தனிக்கும் பன்னாட்டு கம்பெனிகள் ஜிஎஸ்டி முறையை அமலாக்குமாறு நிர்ப்பந்திக்கின்றன. இதனால் ஆதாயமடையப் போவது அந்நிய நாட்டு ஏகபோகங்கள் மட்டுமல்ல. இந்திய ஏகபோகங்களுக்கும் சமமான அளவில் ஆதாயம் கிட்டும். அந்நிறுவனங்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்து ஈட்டும் லாபத்திற்கும் இதே வகையில் ஆதாயமடையும். ஆகவே அவையும் ஜிஎஸ்டியை வலியுறுத்துகின்றன. ஆகவே ஜிஎஸ்டி வரி என்பது மக்கள் நலனுக்கு விரோதமானதும் ஒட்ட ஒட்ட உறிஞ்சும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்கு சேவை செய்யக்கூடியதுமே என்பது இதிலிருந்து தெள்ளத்தெளிவாக விளங்கும்.

### ஜிஎஸ்டியின் மக்கள் விரோதத் தன்மையை எந்த எதிர்க்கட்சியும் அம்பலப்படுத்தவில்லை

இதில் கவனிக்கத்தக்க விஷயம் யாதெனில் ஆரம்பத்தில் லேசான ஆட்சேபங்களைத் தெரிவித்த கட்சிகள்கூட மக்கள் நலன் சார்ந்த இந்த அம்சங்கள் குறித்து எவ்வித ஆட்சேபங்களோ எதிர்ப்போ தெரிவிக்கவில்லை என்பதையேயாம். அவர்களின் ஆட்சேபம் முழுக்க ஜிஎஸ்டி வரியில் மாநில அரசாங்கங்களுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் பங்கு குறித்தும் இதனால் மாநில அரசாங்கங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்புகள் ஆகியவற்றோடு தங்களது ஆட்சேபங்களை குறுக்கிக் கொண்டுவிட்டன. இந்தியாவின் மிகப்பெரிய இடதுசாரி கட்சி என்றறியப்பட்டுள்ள சிபிஐ (எம்) கூட இந்த அம்சத்தைப்பற்றி மட்டுமே ஆட்சேபம் தெரிவித்தது. “வரியை பெருக்கிக்கொள்ள மாநில அரசாங்கங்களுக்கு இருக்கும் சொற்ப அதிகாரங்கள் கூட ஜிஎஸ்டி வரியால் பறிபோகும். இயற்கைப் பேரிடர்களின்போது நிவாரணமும் மறுவாழ்வும் வழங்கவேண்டிய சூழ்நிலைகளின்போதும் மக்கள் நலத்திட்டங்களை அமல்படுத்துவதற்கும் தேவைப்படும் நிதி ஆதாரம் குறைவதால் எல்லாவற்றிற்குமே மத்திய அரசின் தயவை எதிர்பார்த்தே காத்திருக்க வேண்டிய சூழ்நிலை எழும் என்றே ஆட்சேபம் தெரிவித்ததோடு எனவே ஜிஎஸ்டியால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்கான பொறியமைவு குறித்து உரிய முறையில் கவனம் செலுத்தப்படவேண்டும்” என்ற கோரிக்கையை மட்டும் முன்வைத்து இதற்கான உறுதிமொழி மத்திய அரசால் வழங்கப்பட்டதைபடுத்து இம்மசோதா நிறைவேறுவதற்கும் ஆதரவளித்தது. கேரள சிபிஐ (எம்) முதல்வர் ஜிஎஸ்டி அமலுக்கு தனது அரசாங்கத்திற்கு எந்த ஆட்சேபமும் இல்லை எனத் தெரிவித்துவிட்டார். ஆகவே பெயரளவிற்கு சிபிஐ (எம்) கொண்டிருந்த எதிர்ப்பும் தற்போது காணாமற்போய்விட்டது. மக்கள் விரோத இம்மசோதாவை எதிர்ப்பதாக சும்மா பாவ்லா காட்டினர் போலும்!

### முதலாளித்துவத்தில் கொண்டுவரப்படும் சீர்திருத்தம் எதுவும் மக்கள் நலன் சார்ந்ததல்ல

ஒரு முதலாளித்துவ நாட்டிலுள்ள முதலாளித்துவ அரசாங்கம் தானாக முன்வந்து ஆளும் ஏகபோகங்களுக்கு சாதகமாக இல்லாத மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கையையோ திட்டத்தையோ மேற்கொள்ளாது என்பதை நாம் முதற்கண் நன்கு மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். அதிலும் குறிப்பாக ஓட்டுமொத்த முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கும் தீர்க்கவியலா கடுமையான நெருக்கடியில் சிக்கி திணறிக்கொண்டிருக்கையில் முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் உள்ள ஆட்சியாளர்களும் அவர்களின் அரசியல் மேலாளர்களும் அவர்களுக்கு சேவை செய்யும் அரசாங்கங்களும் ஏகபோகங்கள் மற்றும் கார்ப்பொரேட்டுகளின் குறுகிய நலனுக்கு சேவை செய்யும் திட்டங்களையும் சட்டங்களையுமே வகுத்து அதற்கேற்ற விதிகளையும் நடைமுறைகளையுமே மேற்கொள்வர் என்பது திண்ணம். ஆனால் இந்த உண்மையை மக்களிடமிருந்து மறைத்து அவர்களிடையே எதிர்ப்பும் கிளர்ச்சியும் எழுந்திடாது தடுப்பதற்காக உண்மை நிலையை மக்களிடமிருந்து மறைத்து தேன் தடவிய பொய் வாக்குறுதிகளையும் உறுதிமொழிகளையும் தருவர். எனவே இவ்வரசாங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திட்டங்களிலிருந்து ஏதேனும் சொற்ப நிவாரணமேனும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை வளர்த்துக் கொள்வது கானல் நீராகவே முடியும். அதே சமயம் நாளுக்கு நாள் முதலாளித்துவ நெருக்கடி முற்றிக் கொண்டிருக்கையில் பொருளாதார அதிகாரத்தையும் அரசியல் அதிகாரத்தையும் மென்மேலும் மையப்படுத்தி ஒரு புள்ளியில் குவிப்பதற்கே முனைந்துள்ளனர். பொருளாதார அதிகாரக் குவியலால் மக்கள் மென்மேலும் பொருளாதார ரீதியாக சுரண்டப்படுவதால் இயற்கையாகவே எழக்கூடிய கோபமும் வெறுப்பும் நன்கு அணிதிரட்டப்பட்ட போராட்டங்களாக வெடித்துவிடாமல் முளையிலேயே கிள்ளி எறிவதற்காக அரசியல் அதிகாரத்தையும் குவித்து வருகின்றனர். அதிகாரத்தைப் பிரயோகம் செய்வதற்கு முன்பு தேன் தடவிய வார்த்தைகளால் உண்மை நிலையை மறைத்து உண்மையான பிரச்சினையிலிருந்து மக்கள் கவனத்தை திசை திருப்பவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வர். இதுதான் எப்போதுமே நடந்து வந்துள்ளது. ஜிஎஸ்டி வரி கொண்டுவருவதிலும் இதுதான் நடக்கிறது. இந்த அடிப்படை புரிதலோடுதான் நாம் ஜிஎஸ்டி விவகாரத்தை ஆராய்ந்து இக்கட்டுரையில் வழங்கியுள்ளோம். இக்கட்டுரையை வாசித்தோருக்கு முதலாளித்துவத்தின் வஞ்சகத்தனம் பற்றி நாம் இங்கே குறிப்பிட்டுள்ளது எவ்வளவு சரியானது என்பது புரிந்திருக்கும்.

### மக்களாகிய நாம் எதிர்ப்போம்! அணிதிரள்வோம்! போராடுவோம்!

எனவே மிக முக்கியமாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில்: இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு தீவிரமாக அமல்படுத்திவரும் நாசகரமான கொள்கைகளான உலகமயம் தனியார்மயம் தாராளமயக் கொள்கைகளின் பங்கும் பகுதியுமாக விளங்குவதே ஜிஎஸ்டி வரிமுறையின் அமலாக்கமாகும். ஆகவே இவ்விவகாரத்தில் விவாதிக்க வேண்டிய விஷயம் வரி விதிப்பு முறை எந்த அளவிற்கு நடைமுறைச் சிக்கல்கள் களையப்பட்டு சுமுகமான எளிமையான முறையாக அமையக்கூடும் என்பதையல்ல. மாறாக இத்தகைய ஒற்றைப் படுத்தப்பட்ட வரிமுறையின் ஒருங்குதிரட்டப்பட்ட மையப்படுத்தி குவிக்கப்பட்ட பொருளாதார அதிகாரத்தால் சாமானிய இந்தியன் இன்னும் எவ்வாறு பரந்துபட்ட அளவில் இரத்தம் உறிஞ்சப் படுவான் என்பதே நாம் விவாதிக்கவேண்டிய விஷயமாகும். இவ்விவாதத்தைத்தான் இக்கட்டுரையில் நாம் மேலே மேற்கொண்டுள்ளோம்.

எனவே ஆட்டங்கண்டுள்ள தனது பொருளாதார அடித்தளத்தை காப்பாற்றுவதற்காக பொருளாதார அதிகாரத்தை ஒருங்குதிரட்டி குவிப்பதற்காக ஆளும் இந்திய ஏகபோகங்கள் மேற்கொண்டுள்ள கடைசி முயற்சியாகிய பொருளாதார சீர்திருத்த செயற்போக்கின் பிரிக்கமுடியாத பகுதிதான்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# மத்திய அரசாங்கத்தின் மக்கள்–தொழிலாளர் விரோதக் கொள்கைகளைக் கண்டித்து செப்டம்பர் 2 அகில இந்திய பொது வேலைநிறுத்தம்

மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் – மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து தொடர்ந்து இயக்கங்கள் நடத்திவரும் ஏஐயுடியுசி, ஏஐடியுசி, ஐஎன்டியுசி, எச்எம்எஸ், சிஐடியு, டியுசிசி, ஏஐசிசிடியு, யுடியுசி, தொமுச, சேவா ஆகிய மத்திய தொழிற்சங்கங்களின் சார்பாக புதுடில்லியில் தேசிய மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து செப் 2 அகில இந்திய பொது வேலைநிறுத்தம் நடத்த அறைகூவல் விடுத்தது.

இவ்வேலைநிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றி பெறச்செய்வதற்காக தமிழகத்திலுள்ள அனைத்து மத்திய தொழிற்சங்க அமைப்புகளும் இணைந்து பல்வேறு பிரச்சாரங்கள் செய்வதென முடிவுசெய்தது. அவ்முடிவின்படி துண்டுபிரசுரம், போஸ்டர்ஸ் ஒட்டுதல், சுவரெழுத்து, வேன்பிரச்சாரம், சைக்கிள் பேரணிகள், மாவட்ட அளவில் தயாரிப்பு கூட்டங்கள், மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள், மண்டல மாநாடுகள், ஆயத்த மாநாடு என ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 23 வரை தமிழகம் முழுவதும் பிரச்சாரங்கள் நடைபெற்றன.

செப்டம்பர் 2 அன்று பொது வேலைநிறுத்தத்திற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), திமுக, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளும் பல்வேறு தொழிற்சங்களும் ஆதரவு தெரிவித்தன.

செப்டம்பர் 2 வேலைநிறுத்த நாளில் மதுரை, தேனி, புதுக்கோட்டை, விழுப்புரம், நெய்வேலி, சென்னை உள்பட ஏஐயுடியுசியின் தலைவர்களும் தோழர்களும் மறியல் போராட்டத்தில் கலந்துக்கொண்டு கைதாகினர்.



தேனியில் அகில இந்திய பொது வேலைநிறுத்த மறியல்


சென்னையில் பல்லவன் இல்லம் முன்பாக மறியல்

## காவிரிப் பிரச்சினை . . .

2ம் பக்கத் தொடர்ச்சி

தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதற்கு பதிலாக, இந்தப் பொதுக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு மத்திய மற்றும் மாநில அரசாங்களை ஒன்றுசேர்ந்து வலியுறுத்தவேண்டும். இந்த மாநிலங்களில் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்காக நீரைப் பயன் படுத்துவதில் தோல்வியடைந்த அரசாங்கங்கள் அதைப் பயன்படுத்தி மக்களை பிளவுபடுத்தி ஆட்சி செய்ய நினைக்கும் ஆட்சியாளர்களின் நயவஞ்சக சதியை இருவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும். பொதுமக்கள் ஒருவக்கொருவர் காலை வாருவதிலிருந்தும் தாங்கமுடியா நசுக்கல் மற்றும் மனிதத்தன்மையை இழந்து வாழும்நிலையிலிருந்தும் விடுபட்டு மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால் அவர்களது ஒற்றுமைதான் – பெரும்பான்மை மக்களின் இந்த ஒற்றுமைதான் மிகமிக அவசியமானதாகும்.

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்புதான் மக்கள் மீது பொருளாதார, கலாச்சாரத் தாக்குதலைத் தொடுத்து சமூக முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக இருந்துவருகிறது. மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணவேண்டுமென்றால் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி யெறிந்து அந்த இடத்தில் சோசலிச அமைப்பை உருவாக்குவதுதான் ஒரே வழி. இதன் பொருள் முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே பிரச்சினை களைத் தீர்க்க முடியாதென்பதல்ல. மக்கள் வாழ்வின் எரியும் பிரச்சினைகள்மீது ஒன்றுபட்ட வலுவான ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்கவேண்டும். எனவே மனம் தளர்ந்துவிடாமல் நீர் மேலாண்மை, காடுவளர்ப்பு, நுணுக்கமான நில பயன்பாடு போன்ற வற்றில் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் விஞ்ஞானபூர்வ நடவடிக்கைகளை சரியாக அமல்படுத்தி இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி இந்த இழிவான மலிவான அரசியலைப் புறந்தள்ளுமாறும் மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம். உயர்ந்த கலாச்சாரம் மற்றும் அறநெறியின் அடிப்படையில், சரியான அடிப்படை அரசியல் வழியில் சரியான தலைமை யின்கீழ் மக்களின் வலுவான ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களின்மூலம்தான் மக்களின் இதுபோன்ற அடிப்படையான நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கமுடியும். இதன் மூலம்தான் விரும்பும் விடுதலையையும் அடையமுடியும்.

## சரக்கு மற்றும் சேவை வரி . . .

6ம் பக்கத் தொடர்ச்சி

ஜிஎஸ்டி என்ற ஒற்றைப்படுத்தப்பட்ட வரிவிதிப்பு முறை என்பது தெளிவாகிவிட்டது. வறுமையில் உழன்று துன்பத்தால் துவண்டுபோயுள்ள உழைக்கும் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள தீப்பிழம்பொத்த தாக்குதலே இந்த ஜிஎஸ்டி ஆகும். ஆளும் முதலாளித்துவத்தின் தற்போதைய நம்பிக்கைக்குரிய ஏவலாளாகத் திகழும் பாஜக தனக்கு முந்தைய காங்கிரஸ் ஆட்சியிலிருந்து கற்றுக்கொண்டு ஆளும் வர்க்கத்தின் கொள்கை களுக்கு வடிவம் கொடுத்து அமலாக்கும் பொறுப்பு கொண்டுள்ளது. இதற்காக வாக்கு வங்கி அரசியல் நடத்தும் அதிகார மோகம் கொண்ட பாராளுமன்றக் கட்சிகள் அனைத்திடமிருந்தும் ஆதரவைப்பெறும் பணியை பாஜக செவ்வனே செய்து இம்மசோதாவை பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறை வேற்றி இதற்கான சட்டங்களும் விதிகளும் வகுப்பதற்கு தொடர் பிரயத்தனங்களும் நடவடிக்கை களும் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் இந்த பகாசுர பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிராக சரியான தலைமையின் கீழ் நன்கு அணிதிரட்டப்பட்டு நீண்டகால திட்டமிடல்களோடு வலுமிக்க போராட்ட இயக்கங்களை கட்டியெழுப்ப உழைக்கும் மக்கள் விழிப்புணர்வுடன் கொதித்தெழவேண்டியுள்ளது. இதைத்தவிர உழைக்கும் மக்களுக்கு வேறு வழியேதும் இல்லை. மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனை எனும் உன்னதத் தத்துவத்தால் வழி நடத்தப்படும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே ஜிஎஸ்டி குறித்து மக்கள் நலன் நோக்கில் மேற்காணும் பகுப்பாய்வை முன்வைத்துள்ளதோடு மக்கள் நலனைப் பேணுவதில் தனித்தன்மையோடு விளங்குகிறது என்று கூறிக்கொள்ள இயலும். எனவே ஜிஎஸ்டியும் இன்னபிற சீர்திருத்த நடவடிக்கைகளையும் அமல்படுத்துவதற்கு பின்னால் உள்ள உண்மையான கோரமுகத்தை தோலுரித்து அம்பலப்படுத்தி யதார்த்தத்தை தீரத்துடன் எதிர்கொண்டு நீண்ட நெடிய வலுமிக்க போராட்ட இயக்கங்களில் தங்களை இணைத்துக்கொள்ள முன்வருமாறு அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களுக்கும் அறைகூவல் விடுக்கிறோம்.

## சமீபத்திய யூரி சம்பவம் குறித்து

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 29.09.2016 அன்று கீழ்க்கண்ட அறிக்கையினை வெளியிட்டார்.*

யூரியில் நிகழ்ந்த பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதத் தாக்குதல் மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். ஆனால், அதற்கு இந்திய அரசாங்கம் எடுத்த பதில் நடவடிக்கைகள் பிரச்சினையை தீர்க்காது. உண்மையில், இந்நடவடிக்கையானது இரண்டு நாடுகளுக்கு மத்தியில் போர் பதட்டத்தினை ஏற்படுத்தி பொதுமக்களின் நலன்களுக்கு பாதிப்பையே விளைவிக்கும். இப் பயங்கரவாதத்தை தடுத்திட இரு நாடுகளின் அரசாங்கங்களும் ஒரு அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையை துவங்குவது தான் அவசரத் தேவையாயிருக்கின்றது.

## பெட்ரோல், டீசல் விலைகளை கடுமையாக உயர்த்தியிருப்பதை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது

பெட்ரோல், டீசல் விலைகளின் சமீபத்திய உயர்வை கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 01.09.2016 அன்று வெளியிட்ட அறிக்கையில், அத்தியாவசியப் பொருட்களின் விலை ஒவ்வொரு நாளும் அபாயகரமாக உயர்ந்துகொண்டே போய் மக்கள் திணறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இத்தகைய கடும் விலையேற்றமானது அனைத்துப் பிரிவு பொதுமக்களின் வாழ்வை கடுமையாகப் பாதிக்கும் எனக்கூறினார். அனைத்து அத்தியா வசியப் பொருட்களின் விலையேற்றத்திற்கு உடந்தையாயிருக்கும் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தையும் பிற அரசியல் கட்சி களின் தலைமையிலான அரசாங்கங்களையும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

பெட்ரோல், டீசல் விலைகளை கடுமையாக உயர்த்திய இந்த உத்தரவினை உடனடியாக திரும்பப்பெறுமாறு கோரினார்.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# மாபெரும் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களை வெற்றிபெறச்செய்வோம்

## 7 நவம்பர், 2016 முதல் 17 நவம்பர், 2017

நண்பர்களே,

ஈடிணையற்ற முக்கியத்துவம்வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க தருணம் வந்துள்ளது. நவம்பர், 1917இல் ரஷ்யாவில் நடைபெற்ற, மனிதகுல வரலாற்றில் புகழ்மிக்க ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்த, முதல் வெற்றிகரமான சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டுதான் அது. வரலாறு படைத்த அந்த நிகழ்வு, ஒரு நாட்டில் சோசலிசத்தை நிறுவியதோடு மட்டுமல்ல, மனித நாகரீகத்திலும் புதிய சகாப்தத்தைக் கொண்டுவந்தது, அது இந்த பூமியில் மனிதனை மனிதன் சுரண்டாத, உண்மையான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அனுபவிக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியமே என்பதை ஒட்டுமொத்த உலகின் உழைக்கும் மக்களுக்கும் யதார்த்தத்தில் எடுத்துக்காட்டி நம்பிக்கை ஊட்டியது.

முதலாளித்துவம் தனது தீர்க்கமுடியாத முரண்பாடுகளாலேயே முடிவுக்கு வரும் அதோடு உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் சோசலிசத்தை ஏற்படுத்துவதன்மூலம் மனிதசமுதாயம் அடுத்த கட்டத்திற்குள் நுழையும் என்ற மார்க்ஸ் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க போதனையை நவம்பர் புரட்சி நிரூபித்தது. உழைக்கும் வர்க்கத்தால் உலகத்தை மாற்ற முடியும், ஆனால் முதலில் அது தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று மார்க்ஸ் கூறினார். புரட்சிகரக் கட்சியின் தலைமையின்கீழ், வர்க்க விழிப்புணர்வுள்ள தொழிலாளர்கள், வெல்லற்கரிய சக்தியாக மாறுவார்கள். இவை எல்லாவற்றையும் வரலாறு நிரூபித்தது.

மார்க்ஸ், எங்கெல்ஸின் உண்மையான வாரிசும், மாபெரும் ரஷ்ய நவம்பர் சோசலிசப் புரட்சியின் சிற்பியுமான லெனின் அவர்களின் போதனைகளையும் நவம்பர் புரட்சி உறுதிசெய்தது. அவர் மார்க்சிசத்தை சரியாகப் புரிந்துகொண்டார், அது வறட்டுத் தத்துவமல்ல ஆனால் பருண்மையான சூழலில் பருண்மையாக அமல்படுத்த வேண்டிய ஒன்று என்பதைப் புரிந்துகொண்டு மார்க்சிசத்தை படைப்பாக்கத்தோடு பிரயோகப்படுத்தி ரஷ்யாவில் சோசலிசப் புரட்சியைக் கொண்டுவந்தார். ரஷ்யாவின் முந்தைய தீமைகளான வறுமை, பட்டினி, வேலையின்மை, சுகாதார மற்றும் கல்வி வசதிகள் பற்றாக்குறை, பிச்சை, விபச்சாரம் போன்ற அனைத்தையும் சோவியத் ரஷ்யா ஒழித்துவிட்டது என்பதை உற்று நோக்கிய ரொமைன் ரோலண்டு, பெர்னார்ட் ஷா, ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ரவீந்திரநாத் தாகூர், சரத்சந்திரர், க்வாசி நஸ்ரூல் இஸ்லாம், முன்ஷி பிரேம் சந்த், சுப்பிரமணிய பாரதி, சத்யேந்திரநாத் போஸ், மேக்னத் சகா, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங் போன்ற அந்த காலத்தின் ஒவ்வொரு உயர்ந்த புகழ்பெற்ற மனிதர்களும் அந்தப் புரட்சியைப் புகழ்ந்தனர், அதில் சிலர் சோவியத் யூனியனை 'புவியின் சொர்க்கம்' என்றுகூட வர்ணித்தனர்.

லெனின் மறைவிற்குப் பிறகு, அவரது பெயருக்கேற்ற சீடரான, மாபெரும் ஸ்டாலின் தலைமையேற்று, மக்களை ஊக்கப்படுத்தி வலுவான சோவியத் யூனியனைக் கட்டியெழுப்பினார், சர்வதேச உழைக்கும் வர்க்க புரட்சிப் போராட்டம், காலனிகளின் ஏகாதிபத்திய–எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்கள் மற்றும் உலக அமைதி இயக்கங்களின் அரணாக சோவியத் யூனியனை உருவாக்கினார். பாசிச ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஏகாதிபத்திய ஜப்பானால் தொடுக்கப்பட்ட இரண்டாம் உலகப் போரால் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் ஆபத்து உருவானபோது, அந்தத் தாக்குதல்காரர்களை மாபெரும் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் செஞ்சேனை தோற்கடித்தது, இதனால் மனித குலத்தைக் காத்தவர் என்று ஸ்டாலினைப் போற்றினர். இதன் விளைவாக, இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலக சோசலிச அமைதி முகாம் உருவாக்கப்பட்டது, அது உலகின் எந்தப் பகுதியிலும் போரைத் தடுத்து நிறுத்தவல்ல வலுவான சக்தியாக செயல்பட்டது. இவையெல்லாம் மார்க்சிசம்–லெனினிசம் எனும் உன்னதமான சித்தாந்தத்தை சரியாகப் பிரயோகப்படுத்தி நவம்பர் புரட்சியை நடத்தி, அதனைத்தொடர்ந்து வலிமையான சோசலிச சமூகங்களை உருவாக்கியதால் நடந்தன.

பாசிச ராணுவ பலத்தை சோவியத் செஞ்சேனை தோற்கடித்து வெற்றிவாகை சூடியதும் வாழ்வின் அனைத்துக் களங்களிலும் அமெரிக்கா போன்ற மிகவும் வளர்ந்த நாடுகளைக்கூட பின்னுக்குத் தள்ளி சோவியத் சமுதாயம் அடைந்த முன்னேற்றமும் உலகை வியப்பில் ஆழ்த்தியது. அந்தக் கொண்டாட்ட சூழலிலும்கூட, கட்சி ஊழியர்களை கவனக்குறைவாக இருக்கவேண்டாம் என்றும், விமர்சனம் மற்றும் சுயவிமர்சனத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கட்சிக்குள் எதேச்சதிகாரத்திற்கு எதிராகப் போராடுமாறும் எச்சரிக்க ஸ்டாலின் தவறவில்லை. கட்சி ஊழியர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் சித்தாந்தத் தரத்தை தொடர்ச்சியாக உயர்த்துவதன் அவசியத்தையும், இல்லாவிட்டால் முதலாளித்துவ சித்தாந்தம் வலுப்பெறும் என்றும் அவர் வலியுறுத்தினார். அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் உதவியோடு சோவியத் யூனியனுக்குள்ளேயே எதிர்ப்புரட்சி சதி வரலாம் என்றும் அவர் எச்சரித்தார். அவரது ஆலோசனைகளை அமல்படுத்தப்படுவதற்கு முன்பாகவே மார்ச் 1953இல் அவர் காலமானார்.

மாபெரும் ஸ்டாலின் மறைவிற்குப் பின்னர் கட்சியிலும் அரசிலும் அதிகாரத்திற்கு வந்த துரோகி குருச்சேவ் தலைமையில் அத்தகைய மாபெரும் சமுதாயம் உள்ளிருந்தே பலகீனப்படுத்தப்பட்டது துன்பகரமானதாகும். அது எதிர்ப்புரட்சிக்கு இட்டுச் சென்று 1990இல் யுஎஸ்எஸ்ஆர் சிதறுண்டது. இதே காரணங்களால் அதுவரை இருந்த சோசலிச நாடுகளிலும் சோசலிசம் தகர்ந்தது. இதன் விளைவாக, ஏகாதிபத்தியங்களின் தலைமையிலான போர் முகாம் மூர்க்கமடைந்தது, உலகின் சுதந்திர மற்றும் இறையாண்மை நாடுகள் அனைத்தையும் அச்சுறுத்தினர். மார்க்சிசத்தை சரியாகப் பிரயோகித்தால், வர்க்க விழிப்புணர்வுபெற்ற உழைக்கும் வர்க்கம் வெல்லற்கரிய சக்தியாக இருக்கும், அற்புதங்களை உருவாக்கும் என்றும் அதிலிருந்து சிறிது விலகினாலும் அது எதிர்ப்புரட்சிக்கு இட்டுச் சென்று, சுரண்டல் முதலாளித்துவ அமைப்பை மீண்டும் கொண்டு வந்துவிடும் என்று மாபெரும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சே துங், மற்றும் சிப்தாஸ் கோஷ் ஆகியோர் சுட்டிக்காட்டினர். அதையும் இது நிரூபித்தது. மேலும் சோவியத் சோசலிசத்தின் அடித்தளத்தில் பூர்ஷ்வாக்கள் பிரதானமாக ஒழிக்கப்பட்டாலும் சோசலிசத்தின் இருத்தலை அச்சுறுத்தும் வகையில் மேற்கட்டுமானத்தில் சித்தாந்தரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் வலுவான சக்தியாக தொடர்ந்து இருக்கும் என்று 1960களின் மத்தியிலேயே தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தனது கவலையை வெளிப்படுத்தினார்.

1990களில் சோவியத் யூனியனும் சோசலிச முகாமும் கலைக்கப்பட்டபிறகு, வாழ்வதற்கு முன்பைவிட சிறந்த இடமாக இவ்வுலகம் மாறி விட்டதா? போர்கள் காணாமல் போய்விட்டனவா? சோசலிச முகாம் வீழ்வதற்கு முன்பாக முதலாளித்துவவாதிகள்–ஏகாதிபத்தியவாதிகள் பறைசாற்றியதுபோல் வறுமை, எழுத்தறிவின்மை, பாரபட்சம், வேலையின்மை, கலாச்சாரச் சீரழிவு இன்னபிற அனைத்துத் தீமைகளும் இல்லாமல் போய்விட்டனவா? சோசலிசம் வீழ்ந்தபிறகு, சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் ரஷ்யமக்கள் எதிர்கொள்ள நேர்ந்தது மட்டுமின்றி, மனித வாழ்க்கையின் அனைத்துக் களங்களிலும் உலகை இருள் கவ்விக்கொண்டுள்ளது. பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் மட்டுமல்லாது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்கள் தன்னெழுச்சியான போராட்டங்களில் குதித்து வருகின்றனர். மக்கள் எங்கும் மாற்றத்திற்காகக் கதறுகின்றனர். ஆனால் எது இல்லாமல் போய்விட்டது என்றால், அத்தகைய அகவலிமைபெற்ற ஸ்தாபனம் இல்லை என்பதுதான், அதாவது மாற்றத்திற்கான சரியான தலைமை, அதாவது மார்க்சிசம் லெனினிசம்–தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை எனும் புரட்சிகர சித்தாந்தத்தை ஆயுதமாகக் கொண்ட வலுவான உழைக்கும் வர்க்கப் புரட்சிகரக் கட்சி, இத்தகைய இயக்கங்களுக்கு சரியான தலைமை ஏற்று, சோசலிசப் புரட்சியை நடத்தவல்ல போதிய ஸ்தாபன பலத்தோடு இல்லாமல் உள்ளது.

சமூக மாற்றத்தின் தவிர்க்கமுடியா விதிகளின் படி அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் சோசலிசப் புரட்சி நடைபெறுவது தவிர்க்க இயலாதது என்று மார்க்சிசம் காட்டியுள்ளது. உழைக்கும் வர்க்கப் புரட்சிக்கும் சோசலிசத்திற்கும் ஏற்பட்ட பின்னடைவு நீண்டநாட்களுக்கு நீடிக்காது, தற்காலிகமானதே இறுதியில் புரட்சி வெற்றியடையும். இதுதான் சமூகமாற்றத்தின் விதி.

இந்தியா உள்ளிட்ட உலகின் உழைக்கும் வர்க்கத்திற்கு மாபெரும் நவம்பர் புரட்சியின் படிப்பினைகளின் அதிமுக்கியத்துவத்தைக் கருதி, இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட, எமது கட்சி, சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) (எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)) இந்த நவம்பர் புரட்சியின் நூற்றாண்டினை 7 நவம்பர், 2016 முதல் 17 நவம்பர், 2017 வரை பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் நாடுமுழுவதும் கொண்டாட முடிவு செய்துள்ளது.

ஆண்டு முழுமைக்கும் தொடர்ந்து நடைபெற உள்ள விழாவின் அகில இந்தியத் தொடக்க நிகழ்ச்சி 7 நவம்பர், 2016 அன்று மாவலன்கர் மஹால், ராஃபி மார்க், புது டில்லியில் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். சோசலிசப் புரட்சி மனிதகுல வாழ்க்கைக்கு நல்கிய நன்மைகளையும், சோவியத் முகாம் வீழ்ச்சி அளித்த படிப்பினைகளையும் இந்திய உழைக்கும் வர்க்க மக்களிடம் கொண்டு செல்வதற்காக, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இந்தியா முழுவதும் அரங்கக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், விவாதங்கள், ஊர்வலங்கள், பேரணிகள், திரைப்படங்கள் காண்பித்தல், கருத்தரங்கங்கள், பொன்மொழி மற்றும் புகைப்படக் கண்காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கிறது. இதன் நிறைவுவிழா 17 நவம்பர், 2017இல் கல்கத்தாவில் நடைபெறும்.

உங்கள் ஆதரவு மற்றும் பங்கேற்பின் மூலமாக இந்நிகழ்ச்சிகளை மாபெரும் வெற்றியடையச் செய்யுமாறு உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

வாழ்த்துக்களுடன்
**பிரவாஸ் கோஷ்**
பொதுச்செயலாளர்
எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்
Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**